Registered as a news paper.

இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 27 (02.03.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :151

ஆண்கள் பெண்களுக்கு ஏற்ப சீரிய முறையில் சிகை அலங்காரம் செய்ய நாடுங்கள்



CITY BOY HAIR DRESSING CENTRE

இல.256, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்

(சி-645)

## அமைதிக்கு ஆதரவளிப்போம்; வாஜ்பாய் உறுதி!

(புதுடெல்கி)

இலங்கையின் சமாதான நடவடிக் கைகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்.

- இவ்வாறு, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதியளித்துள்ளார். நேற்று இலங் கைப் பிரதமர், இந்தியப் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்ட உறுதி மொழியை வழங்கினார்.

நேற்றைய சந்திப்பில் பரஸ்பரம் பொருளாதார உடன்படிக்கை ஒன்றை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் முன்னோடிக் கூட்டம் அமெரிக்காவில்

ரோக்கியோவில் இவ்வாண்டு நடை பெறவுள்ள, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னோடியான மாநாடு ஒன்று அமெ ரிக்காவில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 14 ஆம் திகதி வொஷிங்ரனில் உள்ள இராஜாங்கத் திணைக்களத்தில் நடைபெறும் இந்த பூர்வாங்கக் கூட்டத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கலந்து கொள்ளவுள்ளதாக அமெரிக்க இரா ஜாங்கத் திணைக்களம் அறிவித்துள ளது.

இந்த மாநாட்டுக்கு, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பிரதி நிதியாக அமெரிக்க அமைச்சர் ஜென ரல் கொலின் பவல் கலந்துகொள் வார்.

இந்த மாநாட்டுக்கு, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுக ளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக களத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இந்த மாநாட்டுக்கு, அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்ஜும் சமுகமளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### விண்ணாணம் விநாசியர்



சமவலு குழம்பக்கூடாது என்ற வையள். உதில மட்டும் ஒதுங்கி றது நியாயமோ!

# நீதிமன்ற விவகாரத்தை நாம் கையாள முடியாது

## கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர்

(கொழும்பு)

**திருமலையில் கைதான ஆறு போராளிகளையும் விடுவிக்கு மாறு, விடுதலைப் புலிகள் கோருவது நியாயமற்ற கோரிக்கை. அவர்கள் நீதிமன்ற சட்டநடவடிக்கைக்கு உட்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களாவர் என, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ரெலவ்சன், விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.**

அவர் மேலும்,

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும், இராணுவச்சிப்பாய் ஒருவரையும் விடுதலைப் புலிகள், சட்டவரம்புக்குட்படாது தடுத்துவைத் திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முர ணானது. எனவே இவர்கள் இருவரையும் விடு தலை செய்ய முன்வர வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (200)

# கைதிகள் விடுவிப்பு உங்கள் பொறுப்பு!

## விடுதலைப் புலிகள் பதில் கடிதம்

(கிளிநொச்சி)

**யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுபவர்களைக் கையாள்வது, சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணியாக இருப்பதே பொருத்தமானது என விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், கண்காணிப்புக் குழு வுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.**

விடுதலைப் புலிகளினால் தடுத்துவைக்கப் பட்டுள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர் மற்றும், இராணுவச் சிப்பாய் ஆகியோரை விடுவிக்கு மாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் விடுதலைப் புலிகளை கேட் டுக் கொண்டமை தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப புக்குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டேக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜெயசூரிய யாழ். வருகிறார்

எரிபொருள், மின்சக்தித் துறை அமைச்சர் கரு ஜெயசூரிய இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று காலை யாழ்ப்பாணம் வரும் அமைச்சர்- உலகவங்கியின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய யப்பட்ட 16 கிராமங்களுக்கான மின் விநியோகத்தினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

குப்பிளான், குமரகோட்டம், கோப் பாய் கிருஷ்ணன் கோவிலடி, கரந் தன், சிறுப்பிட்டி, வாதரவத்தை, ஆவ ரங்கால், தொண்டமனாறு, பொலி கண்டி, வியாபாரிமூலை, வல்லிபுர ஆழ்வார் கோவிற் பகுதி, நவக்கிரி, இளவாலை, மாகியப்பிட்டி, ஆகிய கிராமங்களுக்கான மின்சாரத்தினை அமைச்சர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# காணாமற்போனோரை விசாரிக்க குழுவினர் நேற்று யாழ்.வந்தனர்

## பாதுகாப்பு வலயங்களையும் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்தகாலங் களில் காணாமற்போனோர் சம்பந்த மாக விசாரணைகளை மேற்கொள்ள வென மனிதஉரிமை ஆணைக்குழு வினரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

நேற்று வருகைதந்த இக்குழுவி னர், யாழ்.மாவட்ட பொலிஸ் அத் தியட்சகர் அன்ரனியைச சந்தித்து தமது விசாரணைகளுக்குத் தேவை யான தரவுகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

வலிகாமம் - தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளையும் இவர்கள் பார்வையிட்டனர். இக்குழு வில் இக்பால், முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் தேவநேசன் நேசையா, தென்கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெசிமா இஸ்மாயில், முன் னாள் மன்னார், திருகோணமலை அரசாங்க அதிபர் கமிலஸ் பெர் ணான்டோ ஆகியோர் உள்ளடங் கியிருந்தனர்.

இவர்கள் இன்று வடமராட்சிக்கு விஜயம்செய்து காணாமற்போனோரின் உறவினர்களைச் சந்திக்கவுள்ளனர்.

## சாகும்வரை உண்ணாவிரதம்

வெலிக்கடைச்சிறையில் உள்ள தமிழ்க்கைதிகள் நேற்றுமுதல் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தம்மை விடுதலை செய்யக் கோரியும்,

மன்னார் ஆயர், அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் தம்முடன் கலந்துரையாடவேண்டுமெனக் கோரி யும் அவர்கள் இந்த உண்ணாவிர தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள னர்.

## பாவனைக்குதவா அப்பிள் விற்பனை

யாழ். நகர் மற்றும் அதனை அண் டிய பகுதிகளில், பாவனைக்குதவாத அப்பிள் பழங்கள் விற்பனை செய் யப்பட்டுவருகின்றன என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டி வீதியூடான போக்குவரத் துக்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 1996 படையினர் சுற்றிவளைப்பில்

# கைதடியில் கைதானோரை விடுவிக்க வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் நடைபெற்ற சுற்றிவளைப்பின்போது, கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக் கக் கோரி, காணாமற்போனோர் பாது காவலர் சங்கத்தினர் யாழ்.மேல் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய வுள்ளனர்.

கைதடி, நாவற்குழிப் பகுதியில் 1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட சுற்றிவளைப்பின்போது, நூற்றுக்கணக்கானோர் கைதுசெய் யப்பட்டனர். இவர்களில் பலர் விடு தலை செய்யப்பட்டு இறுதியாக 55 பேர் சிறையில் தடுத்து வைக்கப்பட் டிருந்தனர்.

அண்மையில், தடுத்து வைக்கப் பட்டிருந்த 55 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என செய்திகள் வெளியாகியிருந்த போதிலும், இது வரை 24 பேரே விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

எனவே, கைதடி, நாவற்குழி சுற்றிவளைப்பின்போது, கைது செய் யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும ஏனையவர்களையும் விடுதலை செய் யக் கோரியும் அல்லது அவர்கள் தொடர்பான உண்மை நிலையை வெளிப்படுத்தக்கோரியுமே யாழ். மேல் நீதிமன்றில் காணாமற்போனோா பாதுகாவலர் சங்கத்தினரால் வழக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டராசிரியர் நியமனம்; திறைசேரி அங்கீகாரமில்லை

ஆயிரம் தமிழ்மொழி மூல தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு, திறைசேரி அங்கீகாரம் கிடைக்காததால் அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகத் தெரியவருகின்றது.

ஆயிரம் தொண்டராசிரியர்களுக்கு, நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று முன்பு ஆட்சியிலிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி வாக்குறுதி அளித்திருந்தது. இதற்கு உலகவங்கியும் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

ஆனால், திறைசேரி ஆயிரம் தொண்டராசிரியர் நியமனங்களுக்கான அங்கீகாரம் வழங்காததால் இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப் படாமல் இழுபறி நிலை நிலவுகின்றது.

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-518)

# தீவுக்கு செல்லும் வாகனங்கள் படையினரால் தீவிர சோதனை

(ஊர்காவற்துறை)

வெளியிடங்களில் இருந்து வேலணை ஊர்காவற்றுறை, மண்கும்பான் உட்பட்ட தீவகப் பகுதிகளுக்கு புகையிலை உணர்த்துவதற்காக கொண்டு செல்லப்படும் தேங்காய் மட்டைகளை ஏற்றுச் செல்லும் பொதிகள் அனைத்தும் அல்லைப்பிட்டி கடற்படைச் சோதனைச் சாவடியில் வெளியே இறக்கப்பட்டு சோதனை இடப்படுகின்றது.

இதனால் தீவக விவசாயிகள் பெரும் சிரமப்படுவதாக வேதனைப் படுகின்றனர். அத்துடன் தீவகம் செல்லும் அனைத்து பயணிகளிடமும அடையாள அட்டை பரிசோதனை செய்யப்படுவதுடன் பொருட்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் பரிசோதனை செய்தபின்பே பயணம் தொடர அனுமதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (113)

# மிதிவெடியில் பாதிப்புற்றோருக்கு சர்வோதயம் புனர்வாழ்வளிக்கும்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடிகள், பொறிவெடிகள் சிக்குண்டு அங்கவீனமானவர்களுக்கு புனர்வாழ்வு அமைக்கும் நடவடிக்கையில் சர்வோதயம் ஈடுபட்டுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது தாக்குதல்களாலும், புதைக்கப்பட்ட மிதிவெடிகளின்போது பெருமளவிலான குடும்பஸ்தர்கள், மாணவர்கள் அங்கவீனமாகியுள்ளனர்.

இவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான பல்வேறு தொழில் முயற்சிகளை வழங்குவதற்கு சர்வோதயம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் முதற்கட்டமாக - அங்கவீனர்களுக்கு வழங்கப்படவிருக்கும் சுயமுயற்சி கடன் கையாளும் முறைகள் மற்றும் மேற்கொள்ளும் தொழில்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கும் பயிற்சிக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

இந்த நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கு 15 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படவிருக்கின்றது. (ச)

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் கைதான

# ஏழு தமிழ்க் கைதிகளை மேல்நீதிமன்று விடுவித்தது!

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு தமிழ் இளைஞர்களை கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

1987 இற்கும் 1990 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியப் படையினர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாம்பல்தீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சாந்தரூபன் மற்றும் ஆறு இளைஞர்களே விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் வாபஸ் பெறுவதாக அறிவித்தையடுத்தே இந்த ஏழு தமிழ் இளைஞர்களும் விடுவிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கியதாக, புலிகளிடம் பயிற்சி பெற்றதான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போர் மூலம் தீர்வு அல்ல; கொமன்வெல்த் உறுதி!

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு கொமன்வெல்த் பூரண ஆதரவை வழங்கும் என்றும், அமைதி முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு வாழ்த்துவதாகவும் கொமன்வெல்த் செயலாளர் டொன் மக்கினன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவர் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசியதுடன் வட-கிழக்கு நிலவரத்தையும் நேரில் பார்வையிட்டிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைதி முயற்சிகள் நிலைக்கவும், அதனை உறுதிப்படுத்தும் கொமன்வெல்த் ஆதரவளிக்கும். அத்துடன் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கப்படும் என்றும்,

ஆயுதங்கள் மூலம் எந்தத் தீர்வையும் பெறமுடியாது. அமைதி வழியில்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றும் கூறினார்.

# தென்மராட்சியில் பதினொரு கஷ்டப் பிரதேச பாடசாலைகள்

தென்மராட்சி கல்வி வலயத்தை சேர்ந்த 11 பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி மகாவித்தியாலயம், எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை, கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை, கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம், குடமியன் அ.த.க. பாடசாலை, நாவற்குழி கணபதிப்பிள்ளை வித்தியாலயம், தனங்களப்பு அ.த.க. பாடசாலை, வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம ஆகிய பாடசாலைகள் கஷ்டப் பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

### வடக்கில் சமுர்த்தித்திட்டம் தாமதமடையலாம்

சமுத்திக்கு அவசரமாக நிதியுதவி கிடைக்காமையால், வடக்குக்கான சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு கால தாமதம் ஆகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு திறைசேரியிடமிருந்து, 100 கோடி ரூபா கோரப்பட்டபோதும் இந்த நிதி கிடைக்காதால், வடக்குக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமடையலாம் என்று சமுர்த்திப் பணிப்பாளர் டாக்டர் சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

### புதிய நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நலன்புரிச்சங்கத்தின் தலைவராக க.கனகரத்தினம், உபதலைவர்களாக இ.சிவபுண்ணியம், த.விக்னேஸ்வரதாஸன் ஆகியோரும் பொருளாளராக எஸ்.சிவகுமார், செயலாளராக எஸ்.குணராசா, உதவிச் செயலாளராக கே.அறிவழகன், கணக்காய்வாளராக ரி.இராசமாணிக்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (116)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
அஜித், மாளவிகா நடித்த
உன்னைத்தேடி
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணிக் காட்சி
U 571
அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.
(சி-627)

# பிரச்சினைக்கு அரசியல்தீர்வு; நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## பொ.ஐ.முன்னணியின் செயலாளர் டி.எம் ஜெயரட்ண

வட- கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காணப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து, பொதுஜன ஐக்கிய முன்னணி ஒருபோதும் விலகவில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின்போது இந்த நிலைப்பாட்டை பொ.ஐ.மு வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது கட்சியின் நிலைப்பாட்டை ஜே.வி.பி எதிர்க்கவில்லை என்றும் கூட்டணி அமைப்பது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்ததென்றும் அவர் குறிபபிட்டார்.

ஆயினும், வடக்கு - கிழக்கு யுத்தத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக டி.எம். ஜெயரத்ன மேலும் தெரிவித்தார்.

# விஞ்ஞான வினா விடை தெரிவானோர் விபரம்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வினா விடைப் போட்டியில் தனிப்பட்ட மாணவர்க்கான பிரிவில் தெரிவான மாணவர் விபரம் வெளியாகியுள்ளது.

1 ஆவது இடம் - விமலதர்மையா ஞானரூபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), 2 ஆவது இடம் (இருவர்) - இலட்சுமணசர்மா கேதார சர்மா (யாழ்.இந்துக் கல்லூரி), விவேகானந்தன் கோகுலன் (யாழ். இந்துக் கல்லூரி), 4 ஆவது இடம் - நல்லிவரோதயன் கயநாத் (சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), 5 ஆவது இடம் (இருவர்) - பஸ்தியாம்பிள்ளை சுஜீவன் (புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை), கோபாலசிங்கம் நிருத்திகன் (சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), 7 ஆவது இடம் (இருவர்) - செல்வி. மதுரதா சிவசுப்பிரமணியம் (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வேலாயுதம் சரவணன் (யாழ்.இந்துக் கல்லூரி), 9 ஆவது இடம் - புண்ணியலிங்கம் குருபரன் (புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை), 10 ஆவது இடம் - கனகரட்ணம் திருவரங்கன் (யோகபுரம் மகாவித்தியாலயம், (முல்லைத்தீவு),

இவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் ஏப்ரலில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஆண்டமர்வின்போது வழங்கப்படும்.

முதல் கட்டமான எழுத்துப் போட்டியிலிருந்து பின்வரும் எட்டுப் பாடசாலைகள் இரண்டாம் கட்டமான வாய் மூலமான வினாவிடைப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய மகளிர் பாடசாலை, கரவெட்டி, யாழ். இந்துக் கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி கரவெட்டி, புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை, கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தெரிவானவையாகும்.

# கட்டடப் பொருள் விலை அதிகரிப்பு; அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்பு

கட்டடப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பினால் யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பாதிப்படைந்துள்ளன. இதனால் யாழ்.நகரின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கால யுத்த நடவடிக்கையினால் பாதிப்படைந்திருந்த யாழ். குடாநாட்டில் புனரமைப்பு வேலைகள் துரிதமாக தற்போது நடைபெற்று வருகின்றது. இதனால் கட்டடப் பொருட்களான கல்,மண் என்பவற்றின் விலைகள் திடீர் திடீரென அதிகரிக்கின்றன.

மண்,கல் என்பவற்றின் விலை யாழ். செயலகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் - அதிகமாக இருப்பதனால் இவற்றினைக் கொள்வனவு செய்யமுடியாத நிலை மாநகர சபைக்கு ஏற்பட்டுள்ளது.

வீதிகளை புனரமைப்புச் செய்வதற்கு தா இருந்த போதிலும், கல்லின் விலை அதிகரிப்பால் வீதி புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ள முடியவில்லை எனவும், அதேபோல் மண்ணின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் வாய்க்கால்கள், மதகுகள் மற்றும் கட்டட நிர்மாண வேலைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

## சிறு விளம்பரம்

### HARRIS OFFSET

HARRIS 125 0FFSET PRI NTING MACHINE உடன் விற்பனைக்கு உண்டு. SIZE:- 19'x 25 ITALIAN MADE. தொடர்பு:- 103, சென் பெனடிக் மாவத்தை, கொழும்பு-13, T.P:- 01-324095 (261)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 09-11-1959 இல் பிறந்த சதயம் 4 ஆம் பாதம். கனடாவில் நிரந்தர தொழில் புரியும் சைவ போசன மணமகனுக்கு படித்த, அழகிய, சைவபோசன மணமகள் தேவை. திருமணத்தின் பின் சைவ போசனமாக இருக்க விரும்புவர்களும தொடர்பு கொள்ளவும் (படத்துடன் தொடர்பு கொள்ளவும்) விளம்பர இல.10, மே/பா நமது ஈழநாடு, யாழ்ப்பாணம். (266)

ராஜா யாழ்ப்பாணம்.
7 ஆவது வாரமாக
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா
10.30, 2.30, 6.30
நாளை 3 முதல் 5 ஆம் திகதிவரை இரவு 9.30 மட்டும்.
M.I. 2
(சி-628)

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்
(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-540)

## இன்றைய நாள் இனிய நாள்

### 02-03-2003 - ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- சிநேக நன்மை, புதிய ஸ்தானம், குடும்ப மகிழ்ச்சி, வாகன யோகம், வாக்கு வசீகரம். |
| இடபம் | :- பிரயாசை மிகுதி, சிநேகிதரால் கவலை, தொழில் குறைவு, அவமானம். |
| மிதுனம் | :- தனதானிய லாபம், பூமியால் லாபம், காரியகேடு, பொருள் நஷ்டம். |
| கர்க்கடகம் | :- அக்கினி பயம், அமைதியின்மை, குடும்ப அனுகூலம், தூக்கக் குறைவு, புத்திரரால் நன்மை. |
| சிங்கம் | :- நற்கீர்த்தி, பொருள் வரவு, பொதுசன மதிப்பு, லட்சுமிகரம், திருடர் பயம். |
| கன்னி | :- களஸ்திர சுகம், தரும காரிய வெற்றி, கொடுக்கல் வாங்கல் பிணக்கு, காயமேற்படுதல் |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- கோபமிகுதி, தேகமெலிவு, அதிக பிரயாசம், அந்நியர் உதவி, இல்லச்சிறப்பு. |
| விருச்சிகம் | :- பெரியோர் மதிப்பு, தனலாபம், வீண்பயம், நற்கீர்த்தி, புத்திரரால் நன்மை. |
| தனு | :- உறவினரால் கவலை, பயனற்ற பிரயாசம், கோபமிகுதி, வாக்குக்கலகம். |
| மகரம் | :- பொருள்வரவு, தொழில் விருத்தி, சத்துரு நாசம், ஸ்திரி சுகம், சுபகாரியசித்தி. |
| கும்பம் | :- தாரசுக தடை, பல வகையான ரோகங்கள், நன்மதிப்பு, பணவரவு, நற்கீர்த்தி. |
| மீனம் | :- புதிய சிநேகம், புதிய ஸ்தானம், பொருள்வரவு, சந்தோஷமிகுதி, இல்லச்சிறப்பு. |

# கச்சதீவு உற்சவத்துக்கு யாத்திரிகர்கள் சொந்தப் படகுகளிலும் செல்ல அனுமதி

## நடைமுறைகள் குறித்து பரிபாலகர் அறிவிப்பு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு திருத்தல யாத்திரையை மேற்கொள்வோருக்கான படகுச் சேவைகள் குறிகட்டுவான், நெடுந்தீவு ஆகிய இடங்களில் இருந்து இடம்பெறவுள்ளதாக ஆலயப் பரிபாலகர் அருட்திரு செபநேசரத்தினம் தெரிவித்தார்.

யாத்திரிகர்கள் கச்சதீவு உற்சவத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் அந்தோனியார் ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ளச் செல்லும் யாத்திரிகர்களுக்காக நெடுந்தீவு, குறிகட்டுவான் துறைகளிலிருந்து காலை 6 மணி தொடக்கம் படகுச் சேவைகள் நடைபெறும்.

திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடு 8 ஆம் திகதியும், 9 ஆம திகதி திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். முதல் திருப்பலி 7 மணிக்கும், திருநாள் திருப்பலி 8.30 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்வருடம் யாத்திரிகர்கள் தமது சொந்தப் படகுகளில் பயணஞ்செய்யவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு பிளாஸ்ரிக் படகில் 10 பேருக்கு மேல் ஏற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கச்சதீவுக்கு வரும் யாத்திரிகர்கள் தமக்குத் தேவையான குடிநீர், உணவு, படுக்கைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வரும்படியும் -

வியாபாரம் செய்ய விரும்புவோர்- நெடுந்தீவு உதவி அரச அதிபரிடம் அனுமதி பெறவேண்டும் என்றும், தவக்கால யாத்திரை என்பதால் எந்தவகையான களியாட்டங்களோ, மதுபாவனையோ தடைசெய்யபப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் முறைப்பாடுகள் தமிழில்; அதற்கெனத் தனி உத்தியோகத்தர்!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழர்களின் முறைப்பாடுகளைத் தமிழில் பதிவுசெய்து, முறைப்பாட்டாளர்களின் கையொப்பத்தைப் பெறுவதுடன், ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் தமிழ்மொழியில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகளுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரும், தொழில்வாய்ப்பு அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா நகர மண்டபத்தில் மனிதஉரிமை மீறல்கள் குறித்து ஆராயும் முகமாக நடத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்காண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழர்களின் முறைப்பாடுகள் சிங்களமொழியில் எழுதப்படுவதால், அங்கு என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதைத்தவிர்த்துக் கொள்ளவே தமிழ்மொழியில் முறைப்பாடுகள் எழுதப்படவேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புரிந்துணர்வு உடன்பாடு இல்லையேல் நாடு துண்டு துண்டாகியிருக்கும்

## இந்தியாவில் பிரதமர் ரணில்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் புரிந்துணர்வு உடன்பாட்டைக் கைச்சாத்திட்டிருக்காவிட்டால், நாடு துண்டு துண்டாகச் சிதறிப் போயிருக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதுடில்லியில் 'இந்தியா ருடே' சஞ்சிகையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டிலிருந்து விலகமாடடார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. சர்வதேசத்துக்கும் புலிகள் உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள். இந்த உறுதிமொழியை அவர்கள் மீறமாட்டார்கள் என்று பிரதமர் ரணில் மேலும் குறிப்பிட்டார்.

# யு.என்.டி.பியின் ஆதரவுடன் ஊனமுற்றோருக்கு உதவி!

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் "ஊனமுற்றோருக்கான உதவித் திட்டம்" ஒன்றினை ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் (AROD) இணைந்து ஆரம்பித்துள்ளது.

இத்திட்டம் மிதிவெடி, வெடிபொருளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், வேறு வகைகளில் ஊனமுற்றவர்களுக்கும் நிலைத்து நிற்கக் கூடிய ஜீவனோபாய வாய்ப்புக்களை வழங்குவதை அல்லது மீளளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

150 பேருக்குப் புதிய தொழிலை ஆரம்பிப்பதற்கான அல்லது ஏற்கனவே செய்யும் தொழிலில் புதியமுறைகளைக் கற்பதற்கான தொழில்சார் பயிற்சியும், ஒரு தொழிலை கொண்டு நடத்துவதற்கான தொழில் முகாமைத்துவப் பயிற்சியும், தேவையான தொழிலை ஆரம்பிப்பிதற்கான கடனுதவியும் அடங்கிய ஒரு முழுமையான திட்டமாக இது அமையவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டத்திற்காக ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் தற்போது விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், 42/2, ஆடியபாதம் வீதி, (மருத்துவபீடம் அருகில்) திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித்திட்டம் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்.மாவட்டத்தில் பொருளாதார புனர்நிர்மாணம், நிலைத்து நிற்கக்கூடிய ஜீவனோபாய வாய்ப்புக்கள் போன்றவற்றிற்கு அவசியமான நுட்பங்கள், உதவிகள் ஆகியவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொணடு இயங்கிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# பட்டை தீட்டாத இரத்தினக்கல் ஏற்றுமதி செய்ய அரசு தடை!

பட்டை தீட்டாத இரத்தினக் கற்களின் ஏற்றுமதியைத் தடைசெய்ய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. கேகாலையில் இரத்தினக்கல் பட்டை தீட்டும் மற்றும் ஆபரணக் கைத்தொழில் நிலையம் ஒன்றைப் புதிதாகத் திறந்துவைத்துப் பேசும்போது அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

பட்டை தீட்டாத இரத்தினக்கல் ஏற்றுமதி செய்யப்படுவதால் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் 17 சதவீதம் பாதிக்கப்படுகின்றது. எனவேதான் பட்டை தீட்டாத இரத்தினக்கல் ஏற்றுமதியைத் தடை செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உடற்கல்வித்துறை விரிவுரைகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை முதலாம்வருட அரையாண்டு, இரண்டாம்வருட அரையாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் - நாளை காலை 7 மணிக்குச் செய்முறையுடன் ஆரம்பமாகவுள்ளதாக உடற்கல்வித்துறை இணைப்பாளர் அறிவித்துள்ளார்.



புதுடில்லியில் சோனியாகாந்தியை பிரதமர் ரணில் சந்தித்ததையும், இந்தியா ருடே ஏற்பாட்டில் இடம் பெற்ற கருத்தரங்கில் பிரதமர் ரணில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனம் மீண்டும் சுண்டுக்குளியில் இயங்கும்!

(யாழ்ப்பாணம்)

தற்போது இணுவிலில் இயங்கி வரும் ஜெய்ப்பூர் செயற்கைகால் நிறுவனம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

சுண்டுக்குளியில் இயங்கிவந்த ஜெய்ப்பூர் செயற்கைகால் நிறுவனம-யுத்த நடவடிக்கைகள் காரணமாக இணுவில் வைத்தியசாலையில் இயங்கிவந்தது. இச்செயற்கைக்கால் நிறுவனம் மீண்டும் சுண்டுக்குளியில் தமது பணியை ஆரம்பிக்கவுள்ளது. தற்போது, கட்டடப் புனரமைப்புப் பணிகள் மீள ஆரம்பித்துள்ளதால், பணி முடிவடைந்ததும் மீண்டும் பழைய இடத்தில் அது இயங்கும் எனத் தெரியவருகிறது.

(ரா)

## மன்னார் மாவட்டத்தில்

# எம்.எஸ்.எப். வைத்தியர்கள் சேவையை விலக்க தீர்மானம்

மன்னார் இராணுவக் கட்டுபாடற்ற பகுதிகளில் கடமைபுரிந்த எம்.எஸ்.எவ். அமைப்பின் வைத்தியர்கள் இம்மாத இறுதியுடன் தங்களது சேவையை விலக்கிக்கொள்ளத் தீமானித்திருப்பதாக மன்னார் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 12 வருடங்களாக எம்.எஸ்.எவ்.வைத்தியர்கள் - அடம்பன், விடத்தல்தீவு, பண்டிவிரிச்சான் ஆகிய பகுதிகளில் கடமைபுரிந்ததாகவும், இதன் மூலம் 30 ஆயிரம் மக்கள் நன்மை அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது அரசாங்கமும், தமிழழ விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலை காரணமாக - எம்.எஸ்.எவ். அமைப்பினர் தங்களது சேவைகளிலிருந்து விலக்கிக்கொள்ளத் தீர்மானித்துள்ளார்கள்.

இவர்கள் தமது சேவைகளை விலக்கிக்கொள்ளுமிடத்து, மன்னார் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் சேவைபுரிய 10 வைத்தியர்கள் தேவைப்படுவதாகவும், தற்பொழுது அந்த இடங்களில் பணிபுரிய வைத்தியர்கள் இல்லையென்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# மணலாறு ஊடாக வாகரை திரும்பிய நான்கு மீனவர்கள் கைதாகி விடுவிப்பு

(வவுனியா நிருபர்)

வாகரையிலிருந்து முல்லைத்தீவுக்கு மீன்பிடித்தொழில் செய்ய வந்த நான்கு மீனவர்கள், மணலாறு ஊடாக மட்டக்களப்புக்குத் திரும்பியபோது, தென்னமரவாடியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 24 ஆம் திகதி நான்கு மீனவர்களும் மணலாறு ஊடாக மட்டக்களப்புக்குக் கால்நடையாகப் புறப்பட்டுச் சென்றனர். இவர்களைக் கடந்த 27 ஆம் திகதி காலை 10.30 மணிக்குத் தென்னமரவாடியில் வைத்துப் படையினர் கைதுசெய்தனர்.

தென்னமரவாடியில் இவர்களைப் படையினர் கடுமையான விசாரணைக்குட்படுத்தியதுடன், புலிகள் இயக்க உறுப்பினரா அல்லது இயக்கத்திலிருந்து தப்பி வருகிறீர்களா என்றும் கேட்டு விசாரித்துள்ளனர்.

பின்னர் இவர்களைப் பொலிஸாரிடம் படையினர் ஒப்படைத்தனர். புல்மோட்டைப் பொலிஸார் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இந்த மீனவர்களை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைத்தனர்.

வாகரையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை தங்கேஸ்வரன், குமாரவேலு சந்திரகுமார், சின்னத்தம்பி முத்துலிங்கம், சந்திரசேகரம் சிவராசா ஆகிய நான்கு மீனவர்களையும் கண்காணிப்புக்குழுவினர் புலிகளின் வவுனியா அரசியற் பொறுப்பாளர் எழிலனிடம் ஒப்படைத்தனர்.

இந்நால்வரும் நேற்று மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## முகாமைத்துவ கருத்தரங்கு

வட-கிழக்கு கல்வி அமைச்சின் முகாமைத்துவ கருத்தரங்கு திருமலையில் எதிர்வரும் 05 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்குக்கு யாழ்.பிரதேச செயலகத்தில் இருந்து மைதிலி விசாகரூபன், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இருந்து மா.அரிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (72)

# புனர்வாழ்வு, புனரமைப்பு நிலவரம்; ஆராய தாய்லாந்து அதிகாரிகள்

இலங்கையின் புனர்வாழ்வு, புனரமைப்பு நிலைமை குறித்து நேரில் ஆராய்வதற்காகத் தாய்லாந்து நாட்டு அதிகாரிகள் குழுவொன்று கொழுமபு வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்த இந்தக் குழுவினர்-கொழும்பு, கண்டி உள்ளிட்ட பகுதிகளின் நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர். இக்குழுவினர் இன்று வன்னிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

இலங்கையில் புனர்வாழ்வு, புனரமைப்புத்திட்டங்களில் தாய்லாந்து எவ்வாறு உதவுவது என்பது குறித்த அறிக்கையை இவர்கள் தயாரிக்கவுள்ளனர்.

இக்குழுவினர் இலங்கையிலுள்ள பௌத்த விகாரைகளைப் புனரமைப்பது குறித்து விசேட கவனம் செலுத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாணாமல் அமைச்சர்கள் அரசியல் இலாபம்தேட முயற்சி

## வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்டதன் பின்பு, அதில் சொல்லப்பட்ட மக்களின் நலனுடன் தொடர்புபட்ட அத்தியாவசியமான பல நடவடிக்கைகள் இன்னும் செயற்படுத்தப் படாதநிலையில், தென்னிலங்கையில் இருந்து அமைச்சர்கள் அடிக்கடி யாழ்.குடாநாட்டிற்கு வந்து ஏதாவது ஒரு கட்டடத் திறப்புவிழா வினை நடாத்தி, தமது அரசியல் லாபத்தை சுட்டிச் செல்கின்றனர் என வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இந்தவகையில், மின் சக்தி அமைச்சர் கருஜெயசூரியா- குப்பிளான், நீர்வேலி, கரந்தன் சந்தி உட்பட பல இடங்களில் அமைக்கப்பட்ட மின்மாற்றிகளை ஆரம்பித்து வைக்க வருகின்றார். மின்சாரம் வழங்கப்படுவதனால் பயன்பெறுவது எமது மக்கள் என்றவகையில் நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால், இம்மின்மாற்றிகளை முக்கியமான அமைச்சர்கள்தான் வந்து ஆரம்பித்து வைக்க வேண்டுமா? என்பது மக்கள் மனங்களில் ஒரு கேள்வியாக எழுந்துள்ளது.

ஓராண்டு பூர்த்தியாகிய நிலையிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பலவுண்டு. இதில் எதையுமே செயற்படுத்த, முன்முயற்சிகள் எதையும் செய்யாமல் சாதாரணமாக அப்பகுதிப் பொறியியலாளராலேயே ஆரம்பித்து வைக்கக் கூடிய மின்மாற்றிகளை - ஒரு அமைச்சர்தான் திறந்து வைக்க வேண்டுமா?

இப்படியான நிகழ்வுகளை நடாத்தி அரசியல் லாபம் தேடுவதை விட்டு, ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட - இது வரையில் நிறைவேற்றப்படாமல் உள்ள விடயங்களை முன்னெடுத்து, எமது மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்து, சுமூகமான ஒரு சூழ்நிலையினை ஏற்படுத்தக்க அமைச்சர்கள் முன்வரவேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நெடுந்தீவுக் கோட்டக் குழு விளையாட்டு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான குழு விளையாட்டு நிகழ்வுகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றன. இந்நிகழ்வில் தீவகவலய உடற்கல்விப் பணிப்பாளர் கலந்துகொண்டார்.

வலைப்பந்தாட்டத்தில் நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி அணியும், கரப்பந்தாட்டப் போட்டியில் நெடுந்தீவு மகாவித்தியாலய அணியும், 19 வயதுக்குட்பட்டோருக்கான மென்பந்து, கிரிக்கெட் போட்டியில் நெடுந்தீவு மகா வித்தியாலய அணியும் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டன.

அத்துடன், உதைப்பந்தாட்டப் போட்டியில் மேற்குறித்த இரு பாடசாலைகளும் வலய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (113)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 32 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

நீரிழிவு நோயாளருக்கு மகிழ்ச்சிதரும் தகவல்கள் தொடர்ச்சி...

4. இன்சுலினை மூக்கினுள் விசிறும் (NASAL SPRAY), மூக்கினுள் தெளிப்பான் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

5. நீரிழிவு மரபணுக்களை அகற்றி, நீரிழிவுக் குடும்பத்தில் பிறந்தோருக்கும் நீரிழிவு ஏற்படுவதைத் தடுக்கும் முறைபற்றிய ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

6. மோதிரமாக விரலில் அணியத்தக்கவாறும், கடிகார வடிவில் கையில் கட்டத்தக்கவாறும் தயாரிக்கப்பட்ட சிறிய குளுக்கோமீற்றர்கள் அறிமுகமாகியுள்ளனவாம்.

7. மாரடைப்பு ஏற்படுவதை முன்கூட்டியே அறிவதற்கு, 'சீ றியக்ரிவ் புறோற்றின் (CRP), குருதியில் இருக்கிறதா? என்பதை அறிவதற்கான பரிசோதனை முறைபற்றி ஆராயப்படுகிறது.

பொதுமக்களிடையே நீரிழிவுநோய் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் டாக்டர். தம்பிப்பிள்ளை பேரானந்தராசா அவர்களின் வைத்திய ஆலோசனையுடன் இக்கட்டுரையை எழுதினேன். நீரிழிவின் வகைகள், நீரிழிவு நோயின் அறிகுறிகள், நீரிழிவுநோய் ஏற்படும் வாய்ப்புடையோர், உடலில் குளுக்கோஸின் அளவு பேணும் பொறிமுறை, நவீன சாதனங்களின் பயன்பாடும் நீரிழிவின் பெருக்கமும், சலரோகியின் புண்கள் பற்றிய தப்பெணங்கள், நீரிழிவினால் ஏற்படும் ஆபத்துக்கள், மீளா மயக்கம், நோயாளர் அடையாளட்டை வைத்திருத்தலின் அவசியம், சிறுநீர்ப் பரிசோதனை முறைகள், இரத்தப் பரிசோதனைகள், குளுக்கோமீற்றர் மூலம இரத்தப் பரிசோதனை செய்தல், நீரிழிவுள்ள குடும்பத்தில் பிறந்தோருக்கு ஏற்படும் நீரிழிவின் படிமுறை வளர்ச்சி, நீரிழிவைக் கட்டுப்படுத்தும் முறைகள், எம் முன்னோர் நீரிழிவைக் கட்டுப்படுத்திய முறைகள், நீரிழிவு நோயாளிகள் கவனத்தில் கொள்ளவேண்டியவை, இன்சுலின் பயன்படுத்தும் நீரிழிவு நோயாளர் கவனிக்கவேண்டியவை, நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவு, உயரத்துக்கு ஏற்ற நிறை நிர்வாகம், உடல்எடைச்சுட்டெண் கணிக்கும் முறை, தாவர உணவுகள் சிலவற்றின் சத்து விபரம், இரத்த சோகையை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிகள், சிற்றுயிரிகள், மூன்று வகையான பேன்களின் தொல்லை, கட்டாக்காலி நாய் வளர்ப்பும் - நீரிழிவு நோயாளரின் அவலமும், மலச்சிக்கலுக்குத் தவறான மருந்துகள் பயன்படுத்தல், கண்மூடித் தனமாக பின்பற்றல்களால் நோய்க்கு ஆளாதல், சுகாதாரத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளைக் கைவிடவேண்டும், காசநோயும் - நீரிழிவு நோயாளரும், நீரிழிவு நோயாளருக்கு ஏற்படும் பங்கசு நோய்கள், வழுக்கும் தரையும்- நீரிழிவு நோயாளரும், நீரிழிவைக் கூட்டும் சண்டை சச்சரவுகள், மூலநோயும் நீரிழிவு நோயாளரும், நீரிழிவு நோயாளரை அவலத்துக்கு உள்ளாக்கும் மயிர்க்கொட்டிகள், நீரிழிவைக் கட்டுப்படுத்தும் குளிகைகள் தொழிற்படும் பொறிமுறை, பேரொலி ஏற்படுத்தும் கேடுகள், நீரிழிவு நோயாளரை இனங் காணப் பயன்படுத்தும் குருதிக் குளுக்கோஸ் அளவீடுகள், புற்றுநோயும்- நீரிழிவு நோயாளரும், குடற்புழுத்தொற்று நீரிழிவு நோயாளருக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள், இலாபகரமாக மருந்து வாங்குவதற்குச் செய்யவேண்டியவை,

- என்ற தலைப்புகளின் கீழ், நீரிழிவு நோயாளருக்கு மாத்திரமன்றி எல்லோருக்கும் பயன்படத்தக்கவையும், எல்லோரும் அறிந்திருக்க வேண்டியவையுமான பல விடயங்களைச் சுருக்கமாகவும் அதேவேளை விளக்கமாகவும் தெரிவித்திருந்தேன்.

தொடரும்...


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : ர.அனோஜன்
முகவரி: கதிரிப்பாய், அச்சுவேலி.

ஆறாவது அகவையில்



பெயர் :வ.நிரோஜினி
முகவரி: 74/2, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

---------------------------
பெற்றார் ஒப்பம்


# வன்னி மருத்துவ முகாமுக்கு ஏழு வைத்திய நிபுணர்கள்

(யாழ்ப்பாணம்)

சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ரவிராஜ் உட்பட ஏழு வைத்தியர்கள் நேற்று வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

வன்னியில் நடைபெறும் இலவச மருத்துவ முகாம் ஒன்றிற்காக இவர்கள் அங்கு சென்றனர். வைத்திய வசதி குறைந்த வன்னிவாழ் மக்களிற்கு இவர்கள் இலவச வைத்திய ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் வழங்குவார்கள் என வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரா)

# சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சைக்கிளோட்டப் போட்டிக்கு ஏற்பாடு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்.கியுடெக் நிறுவனம் நடாத்தும் சைக்கிளோட்டப்போட்டி இன்று பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி, இளவாலையில் முடிவடையவுள்ளது. இதில் யாழ்ப்பாணம், இளவாலைப் பகுதிகளிலுள்ள பிராந்தியக் குழு அங்கத்தவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளை, நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை அந்தோனியார் ஆலயப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் பெண்களுக்கான சைக்கிளோட்டப்போட்டி, வல்லிபுரக் கோவிலில் முடிவடையும். தென்மராட்சி வடமராட்சிப் பிராந்தியப் பெண்கள் இப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

மேலும், கியுடெக் நிறுவன மகளிர் தின நிகழ்வுகள் எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ்.அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (60)

# ஊழியர் பற்றாக்குறையால் பூநகரித் தபாலகம் பாதிப்பு

(சரசாலை)

பூநகரியில் உள்ள தபால் அலுவலகத்திற்குப் போதிய அரச ஊழியர்கள் இன்மையால், பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பூநகரித் தபாலதிபர் ச.சடாட்சரம் தெரிவித்துள்ளார்.

1991 இல் படையினர் இப்பிரதேசத்தின் மீது மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினால் 2 இலட்சம் ரூபா பெறுமதியான தபாலகச் சொத்துக்கள், கட்டடங்கள் அழிந்தன. இதனால் இன்றுவரை இத்தபால் அலுவலகத்திற்கு நிரந்தர கட்டடம் அமைக்கப்படவில்லை. தற்போது பூநகரி -தம்பிராய்ப் பகுதியில் இயங்கி வரும் இத்தபால் அலுவலகம் நேற்று முதல் பழைய இடத்தில் இயங்கி வருகிறது.

இத்தபால் அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறை பல வருடங்களாக நிலவுகின்றது. இதனால் அலுவலக வேலைகளைத் தபாலதிபரே மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

### காங்கேசன்துறை கிளை மாவட்ட புதிய சாரண ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் இணைச்சங்கத்தின் புதிய ஆணையாளராக செ.சிவபாதரத்தினம் இலங்கைச் சாரணர் சங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் இப்பதவியில் இருந்து ந.சௌந்தரராஜன் ஓய்வு பெற்றதையடுத்தே இவர் புதிய ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (78)

# சின்னஞ் சிறு செய்திகள்

### பாஷையூரில் காவலரண்கள் அமைப்பு

(பாஷையூர்)

பாஷையூரக கடற்கரையினை அண்டிய பகுதியில் இராணுவத்தினர் புதிதாகக் காவலரண்களை அமைத்து வருவது குறித்து, அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாஷையூர்க் கடற்கரை வீதியில் இராணுவத்தினர் புதிதாகக் காவலரணகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (119)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப.2 மணியளவில் பாடசாலை அதிபர் நா.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்வார்.

### துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 21 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 9 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குக் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பேராசிரியர் சபா. ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

### பளையில் அதிக நெல் விளைச்சல்

பளைப் பிரதேசத்தில் பல வருடங்களின் பின்னர் இம்முறை அதிகளவு நெல்விளைச்சல் கிடைத்துள்ளதாகத் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் யுத்தம் காரணமாகப் பளைப்பிரதேச மக்கள் யாழ். குடாநாட்டிற்கும், வன்னிப் பிரதேசத்திற்கும் இடம்பெயர்ந்து சென்றனர். இதனால் நீண்டகாலமாக விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

# விளையாட்டு அரங்கம்



## கமரா நமஹ



இந்திய வீரர்கள் - கடற்குளியல் மட்டும் போதாது மைதானத்திலும் பொறுப்பாக ஆடவேண்டும்.

எண்பதுகளில் இந்திய மத்திய வரிசையில் ஒரு அபாரமான அதிரடி ஆட்டக்காரர் - மிகக் கவர்ச்சிகரமான துடுப்பாட்டம்- ஆளும் கவர்ச்சிகரமானவர். அவர்தான் சந்தீப் பட்டீல். இன்று அவர் கென்ய அணியின் பயிற்றுநர். இலங்கை அணியை மண்கவ்வச் செய்ததில் இவரின் பங்கு எவ்வளவு? கணிக்க முடியாது. ஒபுயா MAN OF THE MATCH. ஆனால், சந்தீப் பட்டீல் - கென்ய மக்களின் MAN OF THE HEARTS. மனிதர் மிக அடக்கமாகக் காணப்படுகின்றார். அவர் கூறுகிறார், 'கென்ய அணிக்கு பரந்துபட்ட அனுபவம் தேவைப்படுகின்றது. குறிப்பாக இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் கென்ய கிரிக்கெட் வளர்ச்சிக்கு நிறைய உதவி செய்யவேண்டும்.' இன்னும் தொடர்ந்து கூறுகின்றார. "நாங்கள் வித்தியாசமான களங்களில், பரிச்சயமற்ற சூழலில் நிறைய விளையாட வேண்டும். இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் முதற்தர அணியை எங்களுடன் விளையாடவிட வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை. அவர்களுக்கு அடுத்த தரத்தில் உள்ள அணிகளுடன் விளையாடும் சந்தர்ப்பம் தந்தாலே காணும்" என்கிறார். அவரின் கூற்றுப்படி உபகண்ட களங்கள் ஓரளவு கென்ய அணிக்குப் பழக்கமானவை. ஆனால் பூமிப்பந்தின் தெற்கு, வடக்குக் களங்களின் அனுபவம் மிக அவசியமானது என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது.

இன்னும் மூன்று வருட காலத்துக்குள் கென்யா TEST அந்தஸ்த்துப் பெறக்கூடும் என்று ICC அறிவித்துள்ளது தொடர்பாகக் சந்தீப் பட்டீல் சரியானதொரு கருத்தைக் கூறுகிறார். கென்யா அவசரப்பட்டு டெஸ்ட் அந்தஸ்த்தைப்பெற்று, பங்களாதேஷ்போல அரைவேக்காட்டு நிலைக்கு உள்ளாகிவிடக்கூடாது. இன்னும் எங்களுக்குக் காலம் தேவை - எங்கள் ஆட்டத்தைக் கூர்மைப்படுத்துவதற்கு அதுதான் நல்லது என்கிறார். பட்டீலின் கருத்துக்கோவையில் மூன்றாம் உலகுக்கே சொந்தமான துயரம் எதிரொலிக்கிறது. கென்ய கிரிக்கெட் சங்கம் வறுமைப்பட்டது. நிறைய TALANT இருக்கிறது. கென்ய வீரர்கள் மிகச்சிறந்த வீரர்கள். இயற்கையாகவே திறமைகளைப் பெற்றவர்கள். கட்டுமஸ்தான தேகக்கட்டுக் கொண்டவர்கள். BORN ATHLETES. ஆனால் வறுமை வாட்டுகிறதே. பெரும் எடுப்பில் காரியமாற்ற பணம் பற்றாக்குறையாக இருக்கிறதே என்று வருத்தப்படுகிறார். பிரபல்யமான அணிகளைத் தொடர்ச்சியாக அழுத்தத்திற்குட்படுத்த எங்களால் இயலாதென்பது உண்மைதான். ஆனால் நாங்கள் அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதில் பின்நிற்கமாட்டோம் என்கிறார்.

சந்தீப் பட்டீல் ஒரு புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர். இந்தியாவுக்குப் புகழ் சேர்த்தவர். இப்போது தன் எண்ணங்களைக் கென்யாவுக்காக, என்ன அடக்கமான உணர்வுடன் வெளிப்படுத்துகிறார். இதில் ஆச்சரியம் இல்லை. ஏனெனில், முன்னைய இந்திய கிரிக்கெட் வீரர்கள் அப்படித்தான் இருந்தார்கள். ஆனால், இன்றைய இந்திய வீரர்கள்?? பணத்துக்கு எதையும் செய்யத்தயாரான சினிமாக்காரர்கள் ஆகிவிட்டார்கள். T.V கமராக்களின் விசுவாசமிக்க அடிமைகள் ஆகிவிட்டார்கள். இந்திய வீரர்களுக்கு ஒரு ஆலோசனை. ஆட்டங்களுக்கு முன்பாக MAKE UP இலும் கொஞ்சம் நேரம் செலவழித்தால் உங்கள் "நடிப்பு" இன்னும் நன்றாக இருக்கும்.

SANTHEEP WE SALUTE YOU!

– விக்னேஷ் –

## காசே நமஹ



நேஹ்ரா, ஹர்பஜன் மகிழ்ச்சி - கடற்கரையில் மட்டுமா? AP

## சாதனை வீரன்

## சச்சின்

கடந்த 23 ஆம் திகதி நமீபியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் 152 ரன்களை - 151 பந்துகளைச் சந்தித்து குவித்திருந்தார் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. உலகக் கிண்ணப் போட்டிகளில் 4 ஆவது சதமாகவும், இதுவரை 34 சதமாகவும் குவித்திருக்கும் சச்சின், இதுவரை அதிக சதங்களையும், அதிக ஓட்டங்களையும் (11,867) குவித்திருக்கின்றார் என்றால், அவர் எல்லோராலும் நிச்சயமாகப் போற்றப்பட வேண்டிய வீரர்தான்.



சச்சின் சூடு தணியுமா AP

15 வயதில் கிரிக்கெட்டை அணைத்து பிரபல்யம் பெறத் தொடங்கிய சச்சினுக்கு இப்பொழுது 30 வயது. இடுப்பு வலியால் அவ்வப்பொழுது அவதிப்படும் சச்சின் **Test Match** இல் 10,000 ரன்களை எட்டுவதை தற்போது இலட்சியமாகக் கொண்டுள்ளார். இதுவரை 105 **test match** இல் 8811 ரன்களையும், அதிக ரண்களாக 217 ரன்களையும் குவித்திருக்கின்றார்.

இன்னொரு பிரட்மனாகவும், இந்த நூற்றாண்டில் இணையில்லா வீரராகவும் வர்ணிக்கப்படும் சச்சினின் - விக்கெட்டை வீழ்த்துவதே சவால் எனக் கருதும் உலகத்தின் புகழ்வாய்ந்த பந்து வீச்சாளர்கள் ஒருபுறம் நிற்க, **Sachin is our theory** என்று உலகத் தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் அவரின் பாணியைப் பின்பற்றுகிறார்கள்.

இதனை வெளிப்படையாகவே சிறந்த துடுப்பாட்ட வீரர் அன்டி பிளவர் "நான் சச்சினின் துடுப்பாட்டத்தை மிக நுண்மையாகக் கவனித்து பெரும்பாலும் அவருடைய பாணியிலும் **Batting** பண்ணுகின்றேன்" என்று கூறியுள்ளார்.

சச்சினைப் பற்றி இன்னொரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் - 1999 உலகக் கிண்ணப் போட்டிகளில் தனது தந்தையின் இழப்பால் துவண்டிருந்த சச்சின், சோகத்திலும் தன் விவேகம் தளம்பாது, அந்த உலகக் கிண்ணப் போட்டிகளின் முதல் சதத்தை மிக வேகமாகவும், அதிரடியாகவும் குவித்த பெருமைக்குரியதுதான்.

ஒருநாள் போட்டிகளில் தன்னுடைய சாதனைகளைத் தானே முறியடித்துவரும் சச்சின், தன்னுடைய அதிகூடிய ஓட்டமாக 186 ஐக் கொண்டுள்ளார். இந்திய அணிக்கு வலிமையையும், பெருமையையும் சேர்த்து, அடுத்து வருகின்ற உலகக் கிண்ணப் போட்டிகளிலும் (4 ஆவது உலகக் கிண்ணம்) விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சச்சின் டெண்டுல்கருக்கு என்றென்றும் வாழ்த்துக்கள்.

வீ.ஏ.கோபி

## இரவு தரும் தோல்வி!

இரவு - பகல் ஆட்டங்கள் தொடர்பாக நீண்டகாலமாக இருந்து வந்த சர்ச்சையொன்று மீண்டும் தீவரமாக ஆராயப்பட வேண்டிய விடயமாக முன்வைக்கப்பட்டுள்ளது. ODI. கள் இரவு - பகல் ஆட்டமாக நடைபெறுவதைப் பொறுத்தே இந்தச் சர்ச்சை ஆரம்பமாகியுள்ளது. இதற்கான உதாரணங்களும், ஆதாரங்களும் முன்வைக்கப்படுகின்றன. முன்னாள் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுநர் பொப் வூல்மர் இந்த விடயத்தில் கருத்துக் கூறும்போது, பொதுவாக இரவு - பகல் ஆட்டங்களில், முதலில் துடுப்பெடுத்தாடும் அணிகள் கூடுதல் வெற்றி வாய்ப்பைப் பெற்றிருக்கின்றன என்கிறார்.

இதுதொடர்பில் இம்ரான்கான் மிகவும் காட்டமாகக் கருத்து வெளியிட்டுள்ளார். உதாரணத்திற்கு இங்கிலாந்து - பாகிஸ்தான் அணியை வென்றமையையும், இங்கிலாந்தை இந்தியா வென்றமையையும் எடுத்துக்காட்டுகின்றார். மின் ஒளியில் பந்துவீச்சாளருக்குத் தளமும், வானிலையும் கூடுதல் ஒத்துழைப்பைக் கொடுப்பதாக எடுத்துக்கூறப்படுகின்றது. இதுபற்றிக் கருத்துக்கூறும்போது - அன்ரூ கெடிக், மற்றும் அன்டர்சன் ஆகிய இரு வேகப்பந்து வீச்சாளர்களும், மேற்குறிப்பிட்ட இரண்டு ஆட்டங்களிலும் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதையும், அதனூடாக அவர்கள் பெற்ற வெற்றியும் தோல்வியும் எடுத்துக்காட்டப்படுகின்றது. பாகிஸ்தானை இங்கிலாந்து வென்ற ஆட்டத்தில் அன்ரூ கெடிக், அன்டர்சன் இருவரும் மிகத் திறமையாகச் செய்திருந்தார்கள். ஆனால், மாலை வேளையில் இதே பந்துவீச்சாளர்கள் பந்துவீசியபோது அவர்கள் எதிர்பார்த்த அசைவுகளையோ, திருப்பங்களையோ ஏற்படுத்த முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி - இருவருமே சாதாரணமான பந்துவீச்சாளர்களாகவே காணப்பட்டனர் என்கின்றனர். இதேவேளை, இரவு நேரத்தில் ஸ்ரீநாத், சாகீர்கான், நெஹ்ரா ஆகியோர்களின் பந்து வீச்சு தன்னிகரற்றுக் காணப்பட்டது என்பதும், அதற்குக் காரணம் அவர்கள் FLOOD LIGHTS இல் பந்து வீசியதுதான் என்கிறார்.

எனவே, இரவு - பகல் ஆட்டங்கள் அணிகளுக்குச் சமவாய்ப்பைக் கொடுப்பதில்லை என்ற முடிவு வலுப்பெற்று வருவதுடன், எதிர்கால ஆட்டங்களில் இரவு-பகல் ஆட்டங்கள் பற்றிய தீவிர ஆலோசனைகள் செய்யப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டதாகவும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. உலகக் கிண்ணப்போட்டிகளில் இனிவரும் போட்டிகளையாவது பகல் ஆட்டங்களாக மாற்ற இயலுமா என்றுகூட அபிப்பிராயம் கூறப்படுகிறது. (திடீரென இதனைச் செய்யமுடியாது என்பதையும் சகலரும் அறிவார்கள்.) என்றாலும்கூட இந்த விடயம் மிகத் தீவரமாகக் கருத்தில் எடுக்கப்படும் காலம் வந்துவிட்டது போலத் தெரிகிறது. எது எவ்வாறாயினும் இரவு - பகல் ஆட்டத்தில் ஒரு ஜொலிப்பு இருப்பதையும் மறுக்க முடியாது. இதெல்லாம் எழுதிக்கொண்டிருக்கும் போது, கட்டாயம் இனிவரும் இரவு - பகல் ஆட்டங்கள் எல்லாம் உடனடியாகப் பகல் ஆட்டங்களாக மாற்றப்பட வேண்டும் என்று இங்கு ஆவேசக்குரல் எழுகிறது. என்னடா இப்படி ஆவேசம் என்று திரும்பிப்பார்த்தால், "சாமம் சாமமா கண்முழிச்சு கண் எல்லாம் எரியுது. பகல் ஆட்டங்களாக மாத்தினால் பத்து மணிக்கு நித்திரை கொள்ளலாம் அல்லவா", என்கிறார் ஒரு ரசிகர்.

– செந்தூரன் –



வெற்றிதோல்வியைத் தீர்மானிக்கும் இரவு விளக்குகள்

# இந்திய சமஷ்டிக்கு மகிந்தவின் பிரசாரம்; ஒரு பின்னணியும் பல கதைகளும்!

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இலங்கையில் ஆட்சிப்பீடத்திலிருந்தவர்கள் ஆயுதப்படைகளைக் கொண்டும், காடையர்களை ஏவிவிட்டும் தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்களை அடக்கி ஒடுக்கினர்.

மகாத்மாகாந்தியின் வழியைப் பின்பற்றி இலங்கை நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ்மக்கள் - தமது உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் அகிம்சைவழியில் போராடியபோது, ஆயுதப்பலம் கொண்டு அடக்கி ஒடுக்கப்பட்டதை அயலில் உள்ள இந்தியா வாய்மூடி மௌனியாகப் பார்த்துக்கொண்டிருந்தது.

1958 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழ்மக்களுக்கெதிராக நாடு முழுவதும் பேரினவாதிகளால் ஆட்சி பீடத்திலிருந்தவர்களின் ஆசியுடன் இனக்கலகம் தூண்டிவிடப்பட்டது. நிலைமை மோசமடைந்தபின்தான் இந்தியத்தூதுவர் தலையிட்டு அரசை எச்சரித்தார். அதன் பின்னரே அரசு கலகத்தை அடக்க நடவடிக்கை எடுத்தது.

1958 ஆம் ஆண்டின் பின் இடையிடையே இலங்கையில் இனக்கலவரங்கள் ஏற்பட்டன. ஆனாலும் 1977 ஆம் ஆண்டிலும், 1983 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட இனக்கலவரங்கள் தமிழ் இனத்தையே இலங்கையிலிருந்து அழித்து ஒழிப்பதற்கான திட்டத்துடன் தொடங்கப்பட்டன. 1958 இல் ஆரம்பமான தமிழ் இன ஒழிப்பு - 1977 ஆம் ஆண்டில் தொடர்ந்து, 1983 ஆம் ஆண்டில் உச்சக்கட்டத்துக்குச் சென்றது.

1983 ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி -அரசபடைகளையும், காடையர்களையும் எதிர்த்துப் போராடாமலிருந்திருந்தால் இன்று இலங்கையில் தமிழினமே இருந்திருக்காது.

இச்சமயத்தில்தான் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தலையிட்டு



மகிந்த ராஜபக்ஷ

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு உதவத்தயார் என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு எச்சரிக்கையோடு சொன்னார்.

ஜே.ஆர். இதற்கு ஒப்புக்கொண்ட மாதிரி நடந்து - வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு என்று இழுத்தடித்துக் காலம் கடத்தினார். யார் செய்த சதியோ, சூழ்ச்சியோ இந்திரா கொலலப்பட்டதுடன், அந்தப் பேச்சுவார்த்தைகளையும் முடித்து வைத்தார் ஜே.ஆர்..

இதன்பின் ஆயுதப் படைகளைக் கொண்டு தமிழ் மக்களின் போராட்டத்தை அடக்குவதாகக் கூறிக் கொண்டு, தமிழின அழிப்பை இலங்கைப் பேரினவாதம் தொடர்ந்தது. ஜே.ஆர். பதவி நீங்கி பிரேமதாசா ஆட்சிக்கு வந்தார். அவரும் பேச்சுவார்த்தை என்று காலம் கடத்திக் கொண்டே தமிழின அழிபபைத் தொடர்ந்தார்.

பிரேமதாசா உயிரிழந்தபின் சுலபமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வந்த டி.பி.விஜயதுங்க - இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினைதானிருக்கிறது என்று புதுவியாக்கியானம் கொடுத்தார். தமிழ் இன ஒழிப்பைத் துரிதப்படுத்தினார்.

இந்தக் காலகட்டங்களில் தமிழ் மக்கள் உயிர்ப்பலி எடுக்கப்பட்டனர். அவர்களின் உடமைகள் நாசமாக்கப்பட்டன. தமிழர்கள் பாதுகாப்புத் தேடி அங்கும் இங்கும் அலைந்தனர். இந்தியாவுக்கும், வெளிநாடுகளுக்கும் பாதுகாப்புத் தேடி ஓடினர். இந்தியா கவலையும், கண்டனமும் தெரிவித்து வந்ததேயொழிய, இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியா சொன்னபடி அரசியற் தீர்வுகாணவேண்டுமென்று இலங்கையை நிர்ப்பந்திக்க முன்வரவில்லை.

ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்கள் எதிர்த்துப் போராடி தமிழ் மக்களையும், மண்ணையும் பாதுகாத்தனர்.

இதன்பின் ஆட்சிக்கு வந்த சந்திரிகாவும் - போராளிகளுடன் பேச்சு நடத்தினார். அவர் பிறப்பித்த கட்டளைகளைக்கூட இராணுவம் செயற்படுத்த மறுத்தது.

புலிகள் மீது பழியைப் போட்டு, பேச்சுவார்த்தை கைவிடப்பட்டது. 1995 ஆம் ஆண்டில் அதிகாரப் பரவலாக்கல் என ஒரு திட்டத்தைச் சந்திரிகா வெளியிட்டார். இது ஒரு அருமையான திட்டம் என்று சென்னை "இந்து" பத்திரிகைகூடப் புகழ்ந்தது. இத்திட்டத்தை வெளியிட்ட மறுநாளே அதைத்தாம் விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பப் போவதில்லையென்று அறிவித்தார். பின்னர் இத்திட்டம் தெரிவுக்குழு, அது இதுவென்று பல இடங்களும் சென்று, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையானது. இந்நிலையில் தமிழின ஒழிப்புக்கு - தமிழ் இளைஞர்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி, தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாத இயக்கமாக மாற்றுவதில் சந்திரிகாவின் மதியூக மந்திரி லக்ஷ்மன்



கதிர்காமர்

கதிர்காமர் முனைந்தார். உலக நாடுகள் பலவற்றிலும் கதிர்காமரின் முயற்சி பெருமளவு பலனளித்தது.

இந்தியாவின் மறைமுக உதவியையும், ஆதரவையும் - சந்திரிகாவும், கதிர்காமரும் பெற்றுக்கொண்டதே பயங்கரவாதப் பிரசாரத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்த நிலையில்தான் நாட்டில் போர் நீடிக்குமானால் அழிவுதான் மிஞ்சும் என்பதை உணர்ந்த மக்கள், ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிப்பீடத்துக்கு அனுப்பினர்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் உதவுமாறு ரணிலும் கேட்டார். விடுதலைப்புலிகளும், முன்னைய அரசும் அனுசரணையாளர்களாக ஏற்றுக்கொண்ட நோர்வேயும் கேட்டது. என்ன காரணமோ, பேச்சுவார்த்தைக்கும், சமாதான முயற்சிகளுக்கும் ஆதரவு என்று சொல்லிக்கொண்டே இந்தியா பல விஷயங்களிலும் இடக்குப் பண்ணிக்கொண்டிருக்கிறது.

முன்னைய ஆட்சியாளர்களான பொ.ஐ.முன்னணிப் பிரமுகர்கள் இந்தியாவுக்கு ஓடியோடிச் சென்று வருகின்றனர். கதிர்காமர் போனார், அநுரா குழுவினர் போய் வந்தனர். இந்திய வெளியுறவுச் செயலர் இங்கு வருகிறார். இந்திய உயர் அதிகாரிகள் வருகின்றனர். சந்திரிகாவையும் எதிர்க்கட்சியினரையும் சந்திக்கின்றனர். தமிழ் மக்களைப் பிரதிநிதித்து

**எஸ்.எம்.ஜி.**

வப்படுத்தும் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழ்க் கூட்டமைப்பினரைச் சந்திக்க விரும்பவில்லை. விடுதலைப் புலிகளுக்கெதிரான குழுவினரைச் சந்தித்துப் பேசுகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவரை இந்தியாவுக்கு அழைத்துப்பேசி உபசரித்து அனுப்பியிருக்கின்றனர்.

சமஷ்டி ஆட்சி என்றாலே பிரிவினை என்று கூறிவந்தவர்கள், ஆயுதப் போராட்டத்தின் பயனாக இன்று சமஷ்டி ஆட்சி அமைப்பதன்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்ற நிலைக்கு வந்துள்ளனர். இதை இந்தியா வெளிப்படையாகவோ, மகிழ்ச்சியுடனோ ஏற்றுக் கொள்ளவில்லை. மென்று விழுங்கித் தயக்கத்துடன்தான் ஏற்றுக் கொண்டது.

*(தொடரும்)*




நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும் நவீன இயந்திரங்களினால் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்



மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

ஆறாவது ஆறுதல் பரிசு

வழங்குவோர்: சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

**வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!**

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (...................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (...................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? (...................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (...................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (...................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------------------------

வயது: ------------------------------------------------

முகவரி: ------------------------------------------------

------------------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிக்கையில் வெளியாகும்.*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## ஏமாற்றுவதே பிழைப்பாகி...!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா - மலேஷியாவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்த, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய ஞானோபதேசக் கருத்துக்களை வழிமொழிவதாக கொழும்பிலிருந்தும், அக்கட்சி வட்டாரங்களில் புதிய தொனியொன்று கிளம்பி வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா, கோலாலம்பூரில் செய்தியாளர்களிடையே பேசும்போது,

இனிமேல் யுத்தமொன்றுக்கு நாடு செல்ல முடியாது என்றும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசுவதே ஒரேவழியென்றும் கருத்துக் கூறினார்.

அவரது இந்த நிலைப்பாடு - அடிக்கடி மாறும் அவரது கருத்துக்களுடன் ஒப்பிடும்போது, எத்தகைய ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கின்றது என்ற சந்தேகம் அரசியல் அவதானிகள் மத்தியில் எழுந்துள்ள நிலையில்,

வழக்கமாகவே - உச்ச ஸ்தாயியில் சூடான கருத்துக்களை அள்ளி வீசும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும், அம்முன்னணியின் முக்கியஸ்தருமான சரத் அமுனுகம - ஜனாதிபதியின் பேச்சை வழிமொழிபவராகப் பேசியிருப்பது - "நமது நோக்கில்" சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டது போலவே - புதியதொரு நாடக அத்தியாயத்திற்கான ஆரம்பம் என்பதை உறுதியாக்கியிருக்கிறது.

சமாதான முயற்சிகளைப் பொறுத்தளவிலும், விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களைப் பொறுத்த மட்டத்திலும் - கடந்த வாரம் வரை குதர்க்கமாகப் பேசி வந்த சரத் அமுனுகம - நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில்,

விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து திருப்தி கொள்ள முடியாது எனத் தெரிவித்திருக்கிறார்.

இந்த வகையில் - பொதுஜன ஐக்கிய முன்னணி-விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் தொடர்பான தமது பழைய நிலைப்பாட்டைத் தொடர்வதான போக்கைக் கைவிட்டு, உலகத்தோடு ஒத்திசைந்து தமது நகர்வுகளை மேற்கொள்ள முயற்சி செய்வதாகக் காட்டிக் கொள்ளத் தீர்மானித்திருப்பது தெரிகின்றது.

எனினும், இதன் பின்னால் உள்ள அரசியல் சூட்சுமம் - இந்த நிலைப்பாடு, நியாயபூர்வமான சிந்தனையின் வழியே பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் ஏற்பட்டிருக்கிறது என்பது சந்தேகப்படக்கூடியதாகவே இருப்பதை எவரும் மறுக்கமுடியாது.

அதேவேளை - சரத் அமுனுகம தெரிவித்திருக்கும் கருத்தல் ஒரு பகுதியானது - ஜனாதிபதி சந்திரிகாவின் அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரட்டை வேடத்தைத் தாமே அம்பலப்படுத்துவதையும் நோக்கக் கூடியதாக இருக்கின்றது.

மலேஷியாவில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா - தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் தனது முன்முயற்சிகளின் தொடர்ச்சியே எனப் பெருமைப்பட்டுக்கொண்டதுடன், பேச்சுக்களின் ஆபத்தான விளைவுகளைச் சுட்டிக்காட்டித் தடுக்கும் "வழிகாட்டுநராகவும்" தன்னை உலகின் மத்தியில் உருவகப்படுத்திக் கொண்டார்.

ஆனால் - கொழும்பில் பேசிய அவரது பிரதான தளபதிகளில் ஒருவரான சரத் அமுனுகமவோ - தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து திருப்தி கொள்ள முடியாதெனக கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - தற்போது நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாளராக சர்வதேச சமூகத்திற்கு தன்னைக் காட்டிக்கொள்ள -

சரத் அமுனுகமவோ இங்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தில் ஊறிப்போன ஜே.வி.பியுடனான தமது கூட்டுக்குச் சார்பாக, அமைதி முயற்சிகளில் திருப்தியில்லை எனக் கூறிக்கொள்வது -

பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரட்டை வேடத்தை சமகாலத்திலேயே அம்பலமாக்கிக்கொள்ள வைத்துள்ளது.

அதேவேளை - தமிழினத்தை முழுவீச்சுடன் விரோத மனப்பான்மையுடன் எதிர்த்துவரும் ஜே.வி.பியுடன் - மிக நெருக்கமான உறவினை வளர்த்துக் கொண்டே,

ஜனாதிபதி பேசிவரும் "சமாதானப் பேச்சுக்கள" - தனது ஆதாயத்திற்காக அவரும், அவரது முன்னணியும் எதுவும் செய்யத் தயாராயிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

இதன்வழியே இவர்கள் சர்வதேசத்தை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் ஏமாற்றவே முயல்கின்றனர் என்பதை சிங்கள மக்கள் உணரும் நாள் வருமா...?

# போகிற போக்கில்......

**கொழும்பிலிருந்து உதரன்**

இலங்கையில் தாய்மொழியில் கல்வி கற்பது கௌரவமல்ல எனப் பலர் நினைக்கின்றார்கள். ஆங்கிலத்தைக் கற்பதிலும் பார்க்க தமது பிள்ளைகள் ஆங்கிலமொழியிலேயே பாடங்களைக் கற்கவேண்டும் என விரும்புகின்றார்கள். தரம் ஒன்றிலும், தரம் ஆறிலும் ஆங்கிலமொழியில் கல்விகற்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தரம் ஆறில் மூன்று பாடங்களை, விரும்பிய மாணவர்கள் ஆங்கில மொழியில் கல்வி கற்கலாம் என அரசு கூறியுள்ளது. ஆங்கில மொழியில் கல்வி போதிப்பதற்கான அனுமதியைக் கல்வியமைச்சு குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளது. ஆனால், தரம் ஆறில் ஆங்கிலமொழியில் கல்விகற்கும் மாணவர்களுக்கு, ஆங்கில மொழிப்பாடப்புத்தகங்கள் இல்லை. அரசு வெளியிடவில்லை. கொழும்பிலுள்ள சர்வதேசக் கல்லூரியொன்று (தனியார்) குறிப்பிட்ட மூன்று பாடநூல்களை ஆங்கிலமொழியில் மொழிபெயர்த்து 150 ரூபா, 400 ரூபா, 800 ரூபா என்ற விலையில் புத்தகங்களை விற்பனை செய்து வருகின்றது.

இது இவ்வாறிருக்க ஆங்கிலமொழியில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பயிற்சியையும் கல்வியமைச்சு முறைப்படி வழங்கவில்லை.

பல பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைகளில் ஆங்கிலமொழியில் பாடங்களை நடத்துவது தங்களுக்கு கௌரவம் என்று நினைக்கிறார்கள். அதனால் ஆங்கிலம் தெரிந்த ஆசிரியர்களைக் குறிப்பிட்ட பாடப்புலமை இல்லாத நிலையிலும், பாடங்களைக் கற்பிக்க அனுமதித்துள்ளார்கள். இந்த நிலை தொடர்ந்தால் ஆங்கிலமொழியில் கற்கும் மாணவர்களின் கல்விநிலை என்னவாகும் என்று அவர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை. கேட்டால் காலத்தோடு நாமும் ஒத்து ஓடவேண்டும்தானே என்று கூறுகிறார்கள்.

ஆங்கிலமொழியில் கற்பித்தல் நடைபெறும் பாடசாலையில் உள்ள மாணவர்கள், தமிழ்மொழியில் கல்விகற்கும் மாணவர்களை ஏளனமாகப் பார்க்கின்றார்கள். இதனால் தமிழ்மொழியில் கல்விகற்கும் சிறுவர்கள் மனம் வெதும்புவதையும் காணமுடிகின்றது. மாணவர்களிடையே உளவியற்தாக்கம் ஏற்படுவது பற்றி யாராவது சிந்திக்கின்றார்களா?

சிங்களவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது பிள்ளைகள் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்து, அப்பாடத்தில் புலமை பெறுவதையே விரும்புகின்றார்கள். தங்கள் பிள்ளைகள் சிங்கள மொழியிலேயே படிக்கவேண்டும் என்ற தாய்மொழிப் பற்று அவர்களிடம் இருப்பதைக் காணமுடிகின்றது.

தமிழர்களை எடுத்துக்கொண்டால் ஆங்கிலமொழியில் தங்கள் பிள்ளைகள் கல்விகற்பதை விரும்புகின்றார்கள் என்ற உண்மையை உத்தியோகபூர்வமற்ற ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. தலைநகரில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகள் கல்விகற்பதையே தரக்குறைவானதென நினைகக்கின்றார்கள். இதனால பெரும்பாலான தமிழர்கள் இன்டர்நஷனல் பாடசாலைகளையே விரும்புகின்றார்கள்.

இன்டர்நஷனல் பாடசாலை ஒன்றிற்குத் தனது பிள்ளையை அழைத்துச்செல்லும் பெண் ஒருவரைக் கேட்டேன். ஏன் இன்டர்நஷனல் பாடசாலையை விரும்புகின்றீர்கள்? அதற்கு அவர் சொன்னார். எனது கணவர் கனடாவில் இருகக்கிறார். அவர்தான் இன்டர்நஷனல் பாடசாலையில் சேர்க்கச் சொன்னார். அத்தோடு அவர் நின்றுவிடவிலலை. தனது பிள்ளை அரசாங்கப் பாடசாலையில் கல்விகற்பதைக் கௌரவக் குறைவாகக் கணவர் கருதுகின்றார் என்றும் கூறினார்.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் 1999 ஆம் ஆண்டு 10,057 பாடசாலைகள் இருந்தன. இத்தொகை 2000 ஆம் ஆண்டில் 9,976 ஆகக் குறைந்தது. 2001 இல் 9,891 பாடசாலைகளாக மேலும் குறைந்தது. 2002 ஆம் ஆணடில் 9,826 பாடசாலைகளாகக் குறைந்துள்ளன. இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை குறைவடைந்து, சர்வதேசப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

கிராமப்புறப் பாடசாலைகள் பல மூடப்பட்டு வருகின்றன. கிராமத்து மாணவர்கள் பலர் நகரத்தை நோக்கிப படையெடுத்து வருகின்றனர். இதற்குக் காரணம், மேலைத்தேயக் கலாசாரம் எமது நாட்டிற்குள் புகுந்தமையும், அந்த மாயைக்குள் இலங்கைமக்கள் சிக்கித் தவிக்கின்றமையேயாகும். இந்தநிலையை இலத்திரனியல் ஊடகங்களே ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

இது இவ்வாறிருக்க, மலையகப் பகுதிகளில் கட்டாயக் கருத்தடை முறைகளைச் சிலர் திட்டமிட்டு மேற்கொளவதால் தமிழ்ப்பிள்ளைகளின் பிறப்புவீதமும் குறைவடைநதுள்ளது.

மலையக அதிபர் ஒருவர் சொன்னார் - 2003 ஆம் ஆண்டில் தரம் ஒன்றுக்கு 6 மாணவர்களே தனது பாடசாலைக்கு விண்ணப்பித்திருக்கின்றார்களாம். இதனால தனது பாடசாலையை மூடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாக வேதனைப்பட்டார்.

பிறப்புவீதம் குறைவடைந்து வருவதாலும், கிராமப்புற பாடசாலைகள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது. இவற்றையெல்லாம் எமது தமிழ்ச் சமுதாயம் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறது.

ஆங்கிலமொழியில் கல்விகற்பது பற்றிப் புத்திஜீவி ஒருவரிடம் கேட்டேன் அவர் "ஜப்பான் நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் ஆங்கிலமொழியிலா கற்றார்கள். இல்லையே. ஜப்பானியமொழியில் கற்று, உலகிலேயே சாதனை படைக்கின்றார்கள். ஏன் நாம் ஜப்பான் நாட்டை முன்மாதிரியாகப் பின்பற்றக்கூடாது. ஆங்கிலம் கற்கவேண்டும, அம்மொழியறிவு தேவை. ஆனால், ஆங்கிலத்திலேயே சிறுவயதில் கற்பது என்பது அபாயகரமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்றார்.

உலகிலேயே அழிந்துபோகும் மொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழியும் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இனி நம் தமிழர்கள் - தமிழர் என்று சொல்வார்களா அல்லது "ரமிலர்" என்று கூறுவார்களா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி; கொழும்பில் விசேட கலந்துரையாடல்!

யாழ்.குடாநாட்டிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடனான கலந்துரையாடல் ஒன்றுக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

நாளை மறுநாள் பிற்பகல் 2.00 மணிக்கு அமைச்சின் செயலகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களையும் - மாவட்ட கூட்டுறவு ஆணையாளருடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு கோரப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின உட்கட்டமைப்புக்களை முன்னேற்றுவது, இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள "இந்தியன் லைன்" கடன்திட்டம், கூட்டுறவுச் சங்கங்களின் ஆற்றல்களையும், நிர்வாகத்தினையும் மேம்படுத்துவது, நிதியீட்டம் மற்றும் திரவக்காசு, படுகடன் என்பன தொடர்பாக யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைப்பாடு போன்றவை உள்ளடங்கலாக யாழ்.மாவட்டதகில் கூட்டுறவுத் துறையினை எவ்வாறு வளம்படுத்துவது என்பன போன்ற விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

## சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய உணவுச்சாலைகளுக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடானமுறையில் இயங்கிய உணவுச்சாலைகள், பேக்கரிகளுக்கு எதிராக மாநகர சுகாதாரப் பிரிவினரால் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகரும், அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள தேநீர்க்கடைகள், பேக்கரிகள், சாப்பாட்டுக்கடைகள் உரிய சுகாதார முறைப்படி இயங்கவில்லை. இது தொடர்பாகப் பலமுறை சுகாதாரப்பரிசோதகரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் உரிய முறைப்படி நடாத்தப்படவில்லை.

இதனையடுத்து காங்கேசன்துறை வீதி, அரசடி வீதி, நீராவியடி, ஸ்ரான்லி வீதிகளிலுள்ள ஒரு பேக்கரி மற்றும் நான்கு கடைகளுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச)

## தரம் 5 புலமைப் பரிசில் உதவி பெற பெற்றோரின் வருமான எல்லை அதிகரிப்பு

(கொழும்பு)

5 ஆம் தரப் புலமைப் பரிசில் சித்தியடையும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கும் நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி புலமைப்பரிசில் பெறுவதற்கான மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆகக்கூடிய வருடாந்த வருமானம் ரூபா 6 ஆயிரத்தில் இருந்து 24 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப 5 ஆம் தரப் புலமைப்பரிசில் சித்தி பெறும் மாணவர்களுக்கு 6 ஆம் தரத்தில் இருந்து 13 ஆம் தரம் வரை வருடமொன்றுக்கு 2400 ரூபா உதவிப் பணம் வழங்கப்படும்.

கல்வி பொதுத்தராதரப் பரீட்சைக்குத் தோற்றி முதல் தரம் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிபெறும் மாணவர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 3 ஆயிரம் என்ற அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் காலத்துக்கு உதவிப்பணம் வழங்கப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (க)

## யாழ். மக்களின் பிரச்சினைக்கு உதவிகளை வழங்கவுள்ளோம்!

**இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்**

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படை மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கான உதவிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வழங்க விருப்பதாக அதன் தலைவர் ஜெகத் அபயசிங்க தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இவர். செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோது -

வட - கிழக்கு எல்லைப்பிரதேச மக்களுக்குப் புனர்வாழ்வுத் திட்டங்கள் மூலம் உதவிவழங்கத் தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது ஸ்பானிய நாட்டு செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்கு ஆறுமாத காலத்திட்டம ஒன்றை மேற்கொண்டுள்ளோம். புதிதாகக் கிணறுகளைக் கட்டியும், பழைய கிணறுகளைப் புனரமைத்தும், அடிப்படை நிவாரண வசதிகளையும் வழங்கி வருகிறோம்.

இதுபோன்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ள திட்டங்களுக்கு நோர்வே உதவி வழங்கத்தயாராக உள்ளது. கூடுதலான மனிதாபிமான உதவிகள் வட-கிழக்கு, எல்லைக கிராமங்களிற்கு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும தெரிவித்தார்.

இச்சந்திப்பில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் வை.தியாகராஜா, செயலாளர் எஸ்.எச்.நிமல்குமார ஆகியோரும் கலந்துகொண்டனர். (ரா)

# புரிந்துணர்வு உடன்பாட்டை புலிகள் மீறுவதாக இந்தியப் பிரதமரிடம் முறையிட்டார் சந்திரிகா!

மலேசியாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பங்குகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அங்கு சென்றடைந்ததும், கடந்தவாரத்தில் தென்னிலங்கை அரசியல்களத்தில் புதிய நகர்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதி மலேசியா சென்றடைந்த அதேநேரம், அவரின் உரையைப் பலரும் எதிர்பார்த்திருந்தனர். அதிலும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பீடம் பெரும் ஆவலைக் கொண்டிருந்தது.

அதன்படி ஜனாதிபதியும் - அரசாங்கங்களின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றினார். இலங்கையில் சமாதான நகர்வுகள் முன்னோக்கிய நிலையில் செல்வதாகவும், தமது அரசாங்கம் அதனைச் சிறப்பாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளை நேரடியாக குற்றம் சுமத்தாத வகையில் தமது உரையில் அவர்களை விமர்சனம் செய்ததை உணரமுடிந்தது. உலக நாடடு தலைவர்கள் மத்தியில் ஜனாதிபதி இலங்கையில் பேசுவதைப் போல தமது இயல்பான பேச்சைப் பேசியிருந்தால் அவரின் செல்வாக்குக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்...

எதிர்பார்ப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு இருந்தது எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்பார்ப்பு மறுபுறத்தில் சாத்தியமானது. அதாவது, ஜனாதிபதி வழமையைப்போல அணிசேரா மாநாட்டுக்கு நேரம் தாமதமாகச் சென்றார் என்ற குற்றசசாட்டே அதுவாகும். உண்மையாக இல்லாவிட்டாலும்கூட இந்தச் செய்தியை இலங்கை மக்கள் ஏற்றுக்கொண்டனர். இந்த நிலையில் ஜனாதிபதி செயலகம் இதற்கு சற்று ஆவேசமான பதிலை வெளியிட்டிருந்தது.

ஜனாதிபதியின் நேரத் தாமதம் காரணமாக, அணிசேரா நாடுகளினது தலைவர்களின் மாநாடு தாமதமாகியே ஆரம்பமானது எனக்கூறப்பட்ட செய்தியை ஜனாதிபதி செயலகம் மறுத்திருந்தது. ஜனாதிபதி சர்வதேச மாநாடு 'ஒன்றில் பங்குகொள்வதை விரும்பாத சக்திகள், திட்டமிட்டே இந்தப் பொய்யான செய்தியைப் பரப்பியுள்ளன என்றும் இது "ஜனாதிபதியின் சர்வதேசப் புகழைப் பாதிப்படையச் செய்வதற்கான உத்தி எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் இலங்கையில்- ஜனாதிபதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் "கூட்டிணைவு" பேச்சுவார்த்தைகள் கடந்த செவ்வாய்க்கிழமை அன்றும் தொடர்ந்தன. இதில் இரண்டு தரப்பும் இணக்கங்களை எட்டும் அளவிற்குப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டதாக இருதரப்புமே செய்திகளை வெளியிட்டுள்ளன.

பொதுவான உடன்பாடுகளுக்கு மத்தியில் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒருமித்த தீர்வை இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்டமை இங்கு விஷேச அம்சமாகும். பேச்சுவார்த்தை ஆரம்பமாகியதும் பரஸ்பரம் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பல்வேறு பிரச்சினைகளில் உடன்பாடுகள் எட்டப்பட்ட வேளையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபால டி சில்வா - தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இரண்டு தரப்பும் இணங்கிச்செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இதன்போது கருத்துரைத்த மக்கள் விடுதலை முன்னணியின் விமல் வீரவன்ச - அதில் பிரச்சினைகள் எழுவதற்கான சாத்தியங்கள் இல்லை. தாம் நிபந்தனைகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்த தருணத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் 2000 ஆம் ஆண்டு தீர்வுப் பொதி தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு இரண்டு கட்சிகளும் இணக்கம் தெரிவித்தன. எனினும், இதுவரை "தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்போது அதிகாரப்பரவலாக்கம் பற்றிப் பேசக்கூடாது, ஐக்கிய இலங்கைக்குள் அனைவருக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும்" எனப் பேசி வந்த மக்கள் விடுதலை முன்னணியினால், தாம் தீர்வுப்பொதியை ஏற்றுக்கொண்ட விடயத்தைப் பிரசாரமாகக் கொண்டுசெல்ல முடியவில்லை.

எனினும், இம்மாத இறுதிக் காலப்பகுதியில், தமக்குள் உடன்பாடுகளைச் செய்துகொள்வதற்கு இரண்டு கட்சிகளும் இணக்கம் தெரிவித்து, அதனடிப்படையில் - தற்சமயம் அதற்கான ஆவணங்களைத் தயாரித்து வருகின்றன.

இந்த இணக்கக் கூட்டம் முடிவடைந்த நிலையில், மலேசியா - கோலாலம்பூரில் ஜனாதிபதியின் நகர்வுகள் தொடர்ந்தன. கடந்த புதன்கிழமையன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க - அணிசேரா நாட்டு தலைவர்களை சந்தித்துப் பேசினார்.



அணிசேரா மாநாட்டுக்குச் சென்ற சந்திரிகா இந்தோனேஷிய ஜனாதிபதி மேகவதி சுவர்ணபுத்திரியுடன்.

இதில் முக்கியமானவர் இந்திய பிரதம மந்திரி அடல் பிஹாரி வாஜ்பாய். அவருடன் ஜனாதிபதி உரையாடியவேளையில், இருதரப்பு உறவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் ஆராயப்பட்டன. இதற்கிடையில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசப்பட்டபோது, ஜனாதிபதி தமிழீழ விடுதலைப்புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார். நடைமுறைப் போர்நிறுத்த உடன்பாட்டை தமிழீழ விடுதலைப்புலிகள் மீறிவருகின்றனர் என அவர் அடேல் பிஹாரி வாஜ்பாஜிடம் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர் - தமக்கு இது சம்பந்தமாகப் புலனாய்வுத்துறை மூலம் அறிய முடிந்தபோதும், இது உள்நாட்டு விவகாரம் என்பதால் கருத்துக்கள் எதனையும்கூற விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டார். இந்தப் பதில் ஜனாதிபதிக்குத் திருப்தியைத் தரவில்லை. எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் பங்குகொள்ளும் கூட்டங்களில் தமது நாடு பங்கேற்காது என்றும் அடேல் பிஹாரி வாஜ்பாய் கூறியமை ஜனாதிபதிக்குப் பெரும் திருப்தியை அளித்தது.

இவர் இவ்வாறு கூறிய இரண்டு நாட்களிலேயே, பொதுஜன ஐக்கிய முன்னணி தமது வாராந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துவிட்டது.

விவசாயிகளிடம் இருந்து கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை மையம் என்பவற்றின் ஊடாக நெல்லைக் கொள்வனவுசெய்ய அரசாங்கம் 450 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. எனினும் இதுவரை 15 மில்லியன் ரூபாய்கள் மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் 13 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதாக அரசாங்கம் சொல்லிக்கொண்டாலும் அது 12 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றம் சுமத்தியது. நீர் வரி விதிப்பனவு தொடர்பான அரசின் நிலைப்பாடு விவசாயிகளைப் பாதிப்படையச் செய்யும் எனவும் அந்த முன்னணி எதிர்வு கூறியது.

அரசாங்கத்திற்குப் பலமான எதிர்கட்சியாகக் காட்டிக்கொண்டாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்னமும் முறுகல்கள் தொடர்கின்றன. கடந்த வியாழக்கிழமை கட்சியின் கம்பஹா, கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படவிருக்கும் எதிர்ப்புப் பேரணி தொடர்பில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டத்திற்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ - களனி பிரதேசசபையின் தலைவரைக் கண்டதும் தகாத வார்த்தையால் திட்டியுள்ளார். இதன்போது அங்கு பிரசன்னமாயிருந்த, களனி தொகுதி அமைப்பாளர் ஸ்ரீபதி சூரியாராச்சி - மகிந்த ராஜபக்ஷவைத் திட்டியுள்ளார். மகிந்த ராஜபக்ஷவைத் திட்டியதைப் பொறுக்கமுடியாத முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லஷ்மன் பிரேமச்சந்திர - மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகப் பேசியுள்ளார். இதன் காரணமாக அங்கு இரண்டு தரப்புகள் உருவாகி, கூட்டம் குழப்பமடைந்தது. எனினும், சற்றுத் தாமதாகவந்த அனுரா பண்டாரநாயக்க நிலைமையைச் சமாளித்து, கூட்டத்தைக் கொண்டுசெல்ல உதவினார்.

"ஜனாதிபதியைக் கொலை செய்ய கட்சிக்குள் தலைவர் ஒருவரும் காரணமாக இருக்கிறார்" என்ற ஸ்ரீபதி சூர்யாராச்சியின் ஊடக இதழ் செய்தியின் தாக்கமே இந்தக் குழப்பத்துக்குக் காரணமாகும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - முஸ்லிம்களின் ஏக பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டில் முழுமையாக மாற்றம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இனிவரும் காலங்களில் முஸ்லிம் தரப்புத் தனியான தரப்பாகப் பங்கேற்க வேண்டும் என்ற வலியுறுத்தல் பிரதமமந்திரியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், தமது இந்திய விஜயத்தை முடித்து கொண்டதன் பின்னர் கதைக்கலாம் என்ற பதிலுடன் கடந்த வாரத்தில் இந்த முனைப்புக்குப் பிரத மந்திரி முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி நேற்று கண்டியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துக் கட்சியின் எதிர்காலம் மற்றும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

தென்னிலங்கையில் முக்கியமான போராட்டம் ஒன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. விடுதலைகோரி களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் தமது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர். அங்கு தற்சமயம் 87 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் இந்தப் போராட்டம் தீர்க்கமானதாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறத்தில் வடபகுதியின் அதியுயர் பாதுகாப்பு வலய தொடர்பில், இந்திய முன்னாள் படை அதிகாரி சதீஸ் நம்பியாரின் அறிக்யையுடன் அமைச்சர் மிலிந்த மொரகொட இவ்வாரம் இலங்கை திரும்பவிருக்கிறார்.

இதன்பின்னர் அரசியல் நகர்வுகளில் மாற்றங்கள் நிகழலாம் எனப் பொதுவாக நம்பப்படுகிறது.

# தீங்கு நாளில் நீரே எமது அடைக்கலம்!

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வு எப்போதும் இலகுவானதாக, வெளிச்சமுள்ளதாக, சந்தோஷமுள்ளதாக இருக்காது. கிறிஸ்துவைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறவன -

"உஷ்ணம் / வெப்பம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழை தாழ்ச்சியான வருடத்திலும், வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்" என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

அதேசமயம் - 'உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு' (லூக்கா - 16:33) என்றும் எழுதப்பட்டுள்ளதை நாம் வாசிக்கிறோம். எனவே, கிறிஸ்தவன் என்பதால் உலக துனபங்கள் நம்மை அணுகாதென எண்ணுவது தவறு. இவ்வுலகில் நாம் வாழும்வரை கட்டாயம்/நிச்சயம் தீமைகளைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும். ஆகவே, இருள், இன்ப துன்பங்களுக்குள் சென்றுவரத்தான் வேண்டும்.

எனவே, இருள்போன்ற வாழ்க்கை அனுபவங்களைக் கண்டு நாம் பயப்படத் தேவையில்லை. இறைவனோடு நெருங்கிக்கொள்ள இந்தத் துன்பகரமான காலங்கள் நமக்கு உதவுகின்றன. ஆண்டவரை நாம் அதிகமாக நம்ப, நமக்குள் இருக்கும் விசுவாசத்தைப் பலப்படுத்த நமக்கு வாய்ப்பளிக்கின்றன.

## ஞாயிறு நற்சிந்தனை

தீங்கு வந்தாலும், ஓடிச்சென்று ஆறுதலடைய ஒரு இடமுண்டு என்பது எத்தனை ஆறுதல் தருகின்றது. அப்படியிருக்க, அங்கும் இங்கும் அலைவது ஏன்? அதனாலேயே நமக்கு வரும் தீங்கு இன்னும் பன்மடங்கு அதிகரிக்கின்றது.

கிறிஸ்துவுக்குள் அன்புக்குரியவர்களே - பச்சை இலையைத்தான் புழுக்கள் அரிக்கும். அழகிய மலர்கள்தான் மரத்திலிருந்து பறிக்கப்படும். நாம் கனிதரும் கொடியானால் அல்லது மரமானால் தீங்கு எமக்குக் கட்டாயம் வரும்.

கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றிலே அரசர்கள் பலர் தீமைக்குப் பயந்து, இறைவனை மறந்து ஒழிந்தோடவேண்டியநிலை ஏற்பட்டது.

தீங்குகள் எமக்கு எப்படியும் வரும். அது யாராலும் வரலாம் என்ற ஆதங்கத்தை விட்டுவிட்டு, அதை நாம் எப்படி அணுகுகிறோம் என்பதே கவனிக் கப்படவேண்டும்.

தீங்கு வரும்போது நாம் கலங்காமல் இருக்க முடியாது. ஆனால், அக்கலக்கத்தில் நாம் யாரை நாடுகிறோம் என்பதே முக்கியம். எனவே- "இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய எல்லாம்வல்ல இறையேசுவே உம்மைவிட்டு விலகுகிற யாவரும் வெட்கப்படுவார்கள்" ஆகவே, அன்பானவர்களே! அடைக்கலம் தேடி அங்கும் இங்கும் அலைந்து திரிவதை விடுத்து, எல்லாம் வல்லவரிடம் அடைக்கலம் புகுவோமாக.

-சி.என்.ஹெய்ன்ஸ-

# உள்ளூராட்சி ஆணையாளர் நெடுந்தீவுக்கு இன்று விஜயம்

யாழ்ப்பாணம், மன்னார், மட்டகளப்பு மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் அடங்கிய குழுவினர் - இனறு நெடுந்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேசசபைக் கட்டடம, பொதுநூலகம் போன்ற இடங்களில் நிலைகொண்டுள்ள கடற்படை மற்றும் பொலிஸாரினால் பிரதேச சபைப் பணிகளை முன்னெடுப்பதில் உள்ள இடையூறுகள் தொடர்பான உண்மை நிலையினை நேரில் அறியவே யாழ்மாவட்ட உதவி ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (113)

# தபாலக புனரமைப்பு துரிதம் ஜூலையில் திறக்க ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான பிரதம தபாலகம் அதிநவீன வசதியுடன் துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

குடாநாட்டுக்குத் தேவையான அனைத்துத் தொலைத்தொடர்பு வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்படும் என வடமாகாணப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என்.ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டு மக்களுக்கு அஞ்சல் சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் ஏழுகோடி ரூபா செலவில் இந்த பிரதம தபாலகம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கட்டடம் எதிர்வரும் யூலை மாதம் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கரினால் திறந்து வைக்கப்படும் எனப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ச)




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## வாழ்வா...? சாவா...?



"வாழ்வா சாவா ஒருகை பார்ப்போம்" என்று நஸார் ஹுசையின் நம்பிக்கை முதிர்வோடு நிமிர்ந்து நிற்க - வெற்றிமேல் வெற்றி இது, பதினான்காவது தொடர் வெற்றி, இதுவே உலக சாதனை, எங்கே ஒருகை பார்ப்போம், என்று அவுஸ்திரேலிய அணி [illegible]ஜித்து நிற்க - இங்கிலாந்தின் வீழ்ச்சியே எம்மைச் **Super six** இற்குள் இட்டுச் செல்லுமென அவுஸ்திரேலியாவின் வெற்றிக்காகக் காத்திருந்து **Super six** கனவை நனவாக்கத் துடிக்கும் பாகிஸ்தான், சிம்பாவே போன்ற அணிகள் கோயிலில் நேர்த்திக்கடன் வைக்க - "யாராக இருந்தாலும் அரோகராத்தான் எங்கள் கண்களுக்கு இன்று திருவிழாதான்" என்று கிரிக்கெட் இரசிகர்கள் குளிர்ந்து நிற்க - யாரை எழுதுவது, யாருக்காக எழுதுவது ஒன்றுமே தெரியவில்லை, யார் வெல்வார் புரியவில்லை' என்று விமர்சகர்கள் குழம்பி நிற்க - நாளை ஒரு கொண்டாட்டம்தான்.

ஆம்! இங்கிலாந்து அணிக்கும்-அவுஸ்ரேலிய அணிக்கும் **St.George's Park. Port elizabeth** மைதானத்தில், **G.M.T** நேரப்படி காலை 8.00 மணிக்கு நடைபெறுகின்ற ஆட்டம் மிக விறுவிறுப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும் என்பது உண்மை. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி வென்றே ஆகவேண்டும். இல்லாவிட்டால் **Super six** எண்ணம் வெறும் கனவாகவே போய்விடும்.

## நஸார் உன் கையில்!

கடந்த 20 ஆம் திகதி இந்தியாவின் ஆவேசத்தின் மூலம் தோல்வியைத் தழுவிக் கொண்ட இங்கிலாந்து அணியின் விளையாட்டு, இம்முறை இன்னும் சிறப்பாக அமையும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

துடுப்பாட்டத்தில் நஸார், அலெக்ஸ்ரூவட், கொலிங்வூட் போன்றோர் பொறுமையைக் கடைப்பிடித்து நல்லதொரு பலனைக் கொடுப்பார்கள் என்றும், பந்து வீச்சில் அன்டர்சன் மற்றும், பிளிண்டோவ் போன்றவர்கள் அவுஸ்திரேலிய அணிக்கு சிம்ம சொப்பனமாக இருப்பார்கள் என்றும் கூறப்பட்டாலும், அவுஸ்திரேலிய அணியின் மக்ரா, பிரெட் லீ போன்றவர்களை இங்கிலாந்து அணி எப்படிச் சமாளிக்கப் போகின்றது என்பது வினாவாகவே உள்ளது.

அவுஸ்திரேலிய அணிக்கோ சாதனை மேல் சாதனை. இங்கிலாந்து அணிக்கோ, ஜீவமரணப் போராட்டம். எது நடக்கப் போகிறது? நிச்சயமாக நஸாரின் தன்னம்பிக்கைப் போராட்டத்திற்கு ஒரு பலன் கிடைக்கத்தான் போகிறது. இங்கிலாந்து அணி வீரர்கள் எல்லாம் புதிய சபதம் எடுத்து, புதுத்தென்புடன் களமிறங்கப்போகும் இன்றைய ஆட்டம் இங்கிலாந்து அணியை மகிழ்ச்சிக் கடலில் குளிர்விக்கும், அல்லது பார்வையாளர்களைக் கதிரை நுனிவரை கொண்டு சென்று மிக இறுக்கமான முறையில் இங்கிலாந்து அணி தோல்வியைத் தழுவும். தோற்றுவிட்டால், தோல்வியைக் கண்டு துவண்டு போகாதே. நஸார். மீண்டும் மீண்டும் எழலாம்...!

## அள்ளு அள்ளு விக்கெட் அள்ளு

இன்றைய உலகக்கிண்ணப் போட்டிகளில் 50 ஓட்டங்கள் 100 ஓட்டங்கள் என்பதெல்லாம் ஒரு சர்வசாதாரணமாக எடுக்கப்பட்டு, வீரர்கள் அற்புதமாக ஆடுகிறார்கள். ஆனால், இவற்றை எல்லாம் விழுங்குபவர்கள் போல் மைதானத்தில் இரண்டு கிங்கரர்கள் தம்முடைய தவறான தீர்ப்புக்களினால், ரசிகர்களிடையே மிகவும் ஒரு பரபரப்பினை உருவாக்குகின்றார்கள்.

அவர்கள் யார்? அவர்கள்தான் மைதானத்திலே வீரகளின் திறமைகளையெல்லாம் கொன்று, குழிதோண்டிப் புதைக்கும் மைதான மத்தியஸ்தர்கள். இந்தப் பிழையான முடிவுகளைக் கொடுக்கும் மத்தியஸ்தர்களில், முதல் நிற்பவருக்கு 1000 பொற்காசுகள் பரிசு என அறிவித்திருந்தால் அந்தப் பரிசைச் சிறப்பாகத் தட்டிச் செல்லும் மத்தியஸ்தர் அசோக டீ சில்வாதான். யோசனை எதுவுமின்றி கையைத் தூக்கக்கூடிய கொடை வள்ளல். இரவு ஆட்டம் என்றாலும், **Cooling glass** அணியாமல் களமிறங்காதவர். காலில் பட்டால் போதும் உடனே **L.B.W OUT** தான். முதலில் இந்தியாவுக்கு மட்டுமே எமனாக இருந்தவர். இப்போது, எல்லா அணிகளுக்கும் எமனாக மாறியிருக்கிறார். அடுத்தது வெங்கட். என்னப்பா ஆச்சு உமக்கு? நன்றாகத்தானே இருந்தீர். உமக்கும் அசோகவின் வியாதி பிடித்துவிட்டதா? தயவுசெய்து **Super Six** ஆட்டங்களில் வைத்து உங்களுடைய தில்லுமுல்லுகளைக் காட்டாதீர்கள். தாங்கமுடியாது.

இப்போது மத்தியஸ்தர்களில் சிலர் **NO BALL** பார்ப்பதில்லை. அவர்கள் ஏனோ தானோ என்று மத்தியஸ்தம் செய்வது தெரிகின்றது. நம்பியிருந்த ஒரு ஆசிய மத்தியஸ்தரினை பழுதாக்கிய பெருமை, இலங்கை மத்தியஸ்தராகிய அசோக டீ சில்வாவையே சேரும். **Venkat and Asoka show your colours!**

**பஞ்சநாதன் சுதர்சன்**

## இப்படியும் இராணுவம்!



இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கிடையில் டர்பன் நகரில் ஒருநாள் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு **BHARAT ARMY** என்றொரு அமைப்பு மைதானத்தில் இருந்து "நஸார் இந்தியன், நஸார் இந்தியன்" என்றொரு கோஷம் எழுப்பிய வண்ணம் இருந்தது. இது நஸாருக்கே புரிந்துகொள்ள முடியாத ஒன்றாக இருந்திருக்கும். இங்கிலாந்து கிரிக்கெட் ஆடும் இடங்களுக்கு எல்லாம் சென்று இங்கிலாந்துக்கு ஆதரவு தெரிவிக்கும் **BARMY ARMY** என்றதொரு அமைப்பின் சாயலில் உருவாக்கப்பட்டதுதான் **BHARAT ARMY.** இந்த இராணுவத்தில் உள்ளவர்கள் இங்கிலாந்தில் நிரந்தரமாக வசிக்கும் இந்தியர்கள். இவர்கள் மனதால் இந்தியர்களாகவே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். இவர்கள் தங்களைப் பற்றிக்கூறும்போது, நாங்கள் பிரித்தானிய ஆசியர்கள். நாங்கள் இங்கிலாந்தின் ஆதரவாளர்கள். ஆனால், இந்தியாவுடன் - இங்கிலாந்து விளையாடும்போது மட்டும் நாங்கள் இந்திய ஆதரவாளர்கள் என்கிறார்கள். டர்பன் நகரில் இவர்கள் இந்தியத் தேசியக் [illegible]கொடிகள் ஏந்திய வண்ணம் ஆட்டம் பாட்டம் என்று ஆர்ப்பரித்துக்கொண்[illegible]டிருந்தார்கள். தங்கள் தலைமுடியை மூவர்ணக்கொடியின் நிறத்தில் மாற்றியமைத்திருந்தார்கள். நிறைய பீடா போட்டுத் **(PAAN MASALA)** துப்பிக்கொண்டிருந்தார்கள். மிகவும் சிறந்த பிரித்தானிய ஆங்கில மொழி உச்சரிப்பைக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கிரிக்கெட் ஆட்டங்களை இந்திய முறையிலேயே பார்க்க விரும்புகிறோம். பியர் குடித்துக் கும்மாளமிட மாட்டோம். மைதானத்தில் குறட்டை விடமாட்டோம். நாங்கள் எங்கள் மனைவி, பிள்ளைகளுடன்தான் ஆட்டங்கள் பார்க்கச் செல்வோம் என்கிறார்கள். இவர்கள் பல்வேறு நாடுகளில் தம் கிளைகளை நிறுவியிருக்கிறார்கள். எங்களது நோக்கம், செயற்பாடெல்லாம் இந்திய அணியை ஊக்கப்படுத்தி அவர்களை வெற்றிப் பாதையில் கொண்டு செல்வதுதான் என்று உறுதியாகக் கூறுகிறார்கள். நாங்கள் பல திட்டங்கள் வைத்திருக்கிறோம். அது இந்தியாவின் எதிர்காலக் கிரிக்கெட்டுக்கும் உதவும் என்கிறார்கள்.

எல்லாம் நல்லதுதான். பிரித்தானியாவிலேயே வாழ்ந்துகொண்டு அங்குள்ள வாழ்க்கை வசதிகளை அனுபவித்துக்கொண்டு, இங்கிலாந்துக்கு ஆதரவில்லை. இந்தியாவுக்குத்தான் ஆதரவு என்று சொல்வதற்கும் ஒரு துணிவு வேண்டும். நூற்றாண்டுகளாக அவர்கள் இந்தியா எமது கொலனி என்று உரிமை கொண்டாடினார்கள். இன்று கொலனியிலிருந்து இங்கிலாந்தில் குடியேறியவர்கள், இந்தியா எமக்கு முதன்மை என்கிறார்கள். தன்வினை தலைமேல் விடியும்.

**சேர்ச்சில்**

## நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ணப் போட்டியொன்றில் ஒரு அணி அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வெற்றி எது?**

**256 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா நமீபியாவை வென்றமை (2003)**

## யாருக்கு வெற்றி இந்தப் போரில்....!

ஒரு தரவின்படி, இலங்கை - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தை பார்த்து ரசித்தவர்



தொகைதான் மிக அதிகமென்று அறியமுடிகின்றது. இது இரவுப் பறவையொன்று சேகரித்த தகவல். பின்னர் பட்டாசுச் சத்தத்தோடு பயந்தோடி படுத்துக்கொண்டது. இன்னொரு கதை சிவராத்திரிக்கு முதல் ராத்திரியும், ஒரு சிவராத்திரியாகத்தான் கழிந்து விட்டது. ஆனால், நேரம் அவம் போகவில்லை. **NAIL BATING FINISH** என்றால் அது இதுதான். வழக்கமான நடைமுறை. துடுப்பாட இலங்கை அணி தீர்மானிக்கிறது. சனத் சுமைதாங்கி. மொத்தம் 228 ஓட்டங்கள். அதில் 66 சனத் குவித்தது. மற்றவர்கள் எல்லாம் அப்படி இப்படித்தான். குறைந்தது 275 ஆவது அடித்திருந்தால் ஒரு சமாதானம் சொல்லலாம். ஆனால், பெற்ற ஓட்டங்கள் 228. இது மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பயமுறுத்தும் எண்ணிக்கையல்ல. ஆனால், இலங்கை அணி விட்டுக்கொடுக்கும் அணியுமல்ல. மேற்கிந்திய இளம்புயல் சர்வான் களத்தில் இருக்கும்வரை, இலங்கை அணி தைரியமாகத்தான் இருந்தது. ஏனெனில், சமிந்த வாஸும் தோழர்களும் பந்தெறிந்த விதம் அப்படி. ஆனால், சர்வான் இலங்கை அணிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கத் தொடங்கியபோது, ஆட்டம் மேற்கிந்திய அணி பக்கம் திரும்பியது. இருந்தும், சர்வான் துரதிர்ஷ்டவசமாக பவிலியன் திரும்பியபோது ஆட்டம் மீண்டும் இலங்கையின் பக்கமாயிற்று. சந்தர் போல் சேர்த்த 65 ஓட்டங்கள் மிகப்பெறுமதியானவை. இருந்தும், இலங்கையின் வெற்றியைத் தடுக்கும் நிலையில் வேறு யாரும் இல்லை. இந்த வேளையில்தான் யாரும் எதிர்பார்க்காத நிலையில் திடீரென்று சர்வான் களம் புகுந்ததும், பந்து வீச்சாளர்களைத் துவம்சம் செய்ததும், மேற்கிந்திய அணியின் பக்கம் முற்றாகவே வெற்றியைக் கொண்டு போய்விடும் என்ற நிலையை உருவாக்கிவிட்டது. சர்வானின் ஆவேசத்தை யாரும் அடகக்கூடும் என்ற நிலை அறவே கைவிட்டுப் போய்விட, 49 ஆவது ஓவரில் முரளி களம் இறங்குகிறார். இலங்கை அணியின் அபாரமானதொரு வெற்றிக்கு எல்லோருடைய பங்களிப்பும் குறைவின்றி இருந்தாலும், 49 ஆவது ஓவரில் சர்வானுக்குக் கடிவாளம் போட்ட முரளிக்கு பெரும் பங்கு சேரும். **TURNING POINT** அதுவென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். எப்படியோ, இலங்கை பெற்ற வெற்றி கடும் பிரயத்தனத்தினால் பெற்ற வெற்றி. தகுதியான வெற்றி. அதே வேளை, சமிந்த வாஸ் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டமை மிகப்பொருத்தம்.

அதேவேளை, மேற்கிந்திய வீரன் சர்வான் அதேயளவு பெருமைக்குரியவர். அவரது திறமை, திடசங்கற்பம், வைராக்கியம் எல்லாம் மிகப்பெரிய பாராட்டுக்குரிய செயற்பாடுகளாகும்.

**ரசிகர்களுக்கு எமது வாழ்த்துக்கள்**

DC PARADISE
அனைத்து விதமான கணனித் தேவைகளுக்கும்

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இந்தியா எதிர் பாகிஸ்தான் அணி

**பாகிஸ்தான் அணி**

| | | |
|---|---|---|
| சயிட் அன்வர் | b நெஹ்ரா | 101 |
| த.ஃபீக் உமர் | b ஷாஹீர்கான் | 22 |
| அப்துர் றஸாக் | C டிராவிட் b நெஹ்ரா | 12 |
| இன்சாமாம் | run out | 06 |
| யொகானா | C ஷாஹீர்கான் b சிறிநாத் | 25 |
| யூனுஸ் கான் | C மொக்கியா b ஷாஹீர்கான் | 32 |
| அப்ரீடி | C கும்ளே b மொங்கியா | 09 |
| லத்தீவ் | not out | 29 |
| வசீம் அக்ரம் | not out | 10 |
| உதிரிகள் | | 27 |
| மொத்தம் 7 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 273 |

**பந்து வீச்சு - இந்திய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஷாஹீர்கான் | 10 | 0 | 46 | 2 |
| சிறிநாத் | 10 | 0 | 41 | 1 |
| நெஹ்ரா | 10 | 0 | 74 | 2 |
| கும்ளே | 10 | 0 | 51 | 0 |
| கங்கூலி | 03 | 0 | 14 | 0 |
| ஷேவாக் | 04 | 0 | 19 | 0 |
| மொங்கியா | 03 | 0 | 19 | 1 |

**இந்திய அணி**

| | | |
|---|---|---|
| டெண்டுல்கர் | C யூனுஸ்கான் b அக்தார் | 98 |
| ஷேவாக் | C அப்ரீடி b வக்கார் | 21 |
| கங்கூலி | LBW b வக்கார் | 00 |
| கைஃப் | b அப்ரீடி | 35 |
| டிராவிட் | not out | 44 |
| யுவ்ராஜ்சிங் | not out | 50 |
| உதிரிகள் | | 28 |
| 4 விக்கெட்டுக்களை இழந்து (45.4 ஓவர்கள்) | | 276 |

**பந்து வீச்சு - பாகிஸ்தான் அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வசீம் அக்ரம் | 10 | 0 | 48 | 0 |
| அக்தார் | 10 | 0 | 72 | 1 |
| வக்கார் | 8.4 | 0 | 71 | 2 |
| அப்ரீடி | 09 | 0 | 45 | 1 |
| அப்துர் ரஷாக் | 08 | 0 | 36 | 0 |

நேற்று நடைபெற்ற இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.
சிறப்பாட்டக்காரர் - சச்சின் டெண்டுல்கர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homelan

# காணாமற்போனோர் விபரங்கள் அரசாங்கத்திடம் பெற்றுத் தருக!

## புலிகளிடம் பாதுகாவலர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்களில், 1996,1997 ஆண்டுப் பகுதிகளில படையினரால் கைதாகி காணாமற் போனோர் தொடர்பாக அரசுடன் பேசி, காலதாமதமின்றி கைதானவர்களில் கொல்லப்பட்ட, உயிரோடிருப்பவர்களின பட்டியலை அரசிடமிருந்து பெற்றுத்தருமாறு, விடுதலைப்புலிகளை -வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது உடன் பிறப்புக்களும், எமது சங்க உறுப்பினர்களுமாக எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 250 பேர் இற்றைவரை- 1996/ 1997 காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு எதுவித தகவலுமின்றி உள்ளனர். கணவன் கைது செய்யப்பட்ட இளம பெண்கள் மறுவாழ்வை தேடுவதற்கு கூட இயலாத இக்கட்டான நிலையில், கைதான தமது கணவர்கள் திரும்ப வருவார்கள் என்னும் நிலையில் வாழவும் வழியின்றி, சாகவும் வழியின்றி மிகவும் மனவருத்த நில்லையில் வாழ்கின்றனர். கைது செய்யப்பட்ட பிள்ளைகளின் பெற்றோரில் அநேகர் பிள்ளைகளைப் பிரிந்த ஏக்கத்தால் இறந்து விட்டனர் அல்லது நோயாளிகளாகி விட்டனர்.

தாங்கள் அடுத்து நடாத்தவிருக்கும், ஜப்பான் பேச்சுவார்த்தையின் போது அரச பிரதிநிதி பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பிரதமர் ஆகியோருடன் இதுபற்றி நடவடிக்கை மேற்கொண்டு ஆவன செய்தல் வேண்டுமென, சங்க உறுப்பினர்கள் ஆவலுடன் எதிர் பார்க்கின்றனர். சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் மாறிமாறி தமது இந்த மனித உரிமை மீறல்கள் உலக நாடுகளுக்கு தெரியவந்து விடும் எனும் நோக்கிலும், உலகநாடுகளால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் தடைப்பட்டு விடும் எனும் நோக்கில் காலத்தைக் கடத்தி வருவதுடன் - கைதானவர்களின் குடும்பத்தினர் நோய்வாய்ப்பட்டு அல்லலுறும் நிலையை ஏற்படுத்தியுள்ளனர். நீங்கள் இதற்கான முடிவை, காலத்தை நீடிக்க அனுமதிக்காமல் கைதானவர்களில் உயிரோடிருப்பவர்களின் பட்டியலையும், கொல்லப்பட்டவர்களின் பட்டியலையும் உலக நாடுகளின அழுத்தங்களை ஏற்படுத்தி, அரசிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென எமது சங்கம் தங்களைக் கேட்டுக்கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கைதிகள் விடுவிப்பு...

அக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

போர் நிறுத்த உடன்படிக்கையை மீறியமைக்காக எமது நீதித்துறையின் சட்ட நடைமுறைகளுக்கமைய தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் இராணுவச் சிப்பாய் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஆகியோரை விடுதலை செய்யுமாறு கோரி நீங்கள் அனுப்பியிருந்த கடிதங்கள் கிடைத்தன. எமது நீதித்துறையின் சட்ட நடைமுறைகளுக்கேற்ப அவர்களை விடுவிப்பதற்கான சாத்தியமான முயற்சிகளை நாம் ஏற்கனவே மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டோம் என்பதை அறியத்தருகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில், எமது ஆறு போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதோடு, கடந்த பல மாதங்களாக அவர்களை விடுதலை செய்வதற்கான வழிவகைகளை செய்துதருமாறு நாம் உங்களிடம் தொடர்ச்சியாகக் கேட்டுவருகின்ற போதிலும் - அப்போராளிகள் தொடர்ந்தும் அரசாங்கத்தினரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். எமது வேண்டுகைக்கு இன்று வரையும் எந்த விதமான ஆக்கபூர்வமான பதிலும் கிடைக்காதது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தை தருகின்றது.

உண்மையிலேயே யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடுபவர்கள் அல்லது சம்மந்தப்படுபவர்களைக் கையாள்வது சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவாகவே இருப்பது பொருத்தமானது. இது பற்றி நாம் பல தடவைகள் உங்களுக்கு வலியுறுத்தியிருந்தோம். ஒப்பந்தத்தை மீறியவர்களை இரு தரப்பினரும் தமது பிரதேசங்களின் சட்ட நடைமுறைக்குட்படுத்துவது இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டினை அர்த்தமற்றதாக்கிவிடுவதோடு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளையும் சீர்குலைக்கும் அபாயம் உள்ளதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறோம்.

ஆதலினால், இனிவரும் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள்வது சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுதான் என்ற தெளிவான நிலைப்பாட்டை உருவாக்கி, இரண்டு தரப்பினரிடையேயும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதோடு, தடுப்புக்காவலில் உள்ள இரண்டு தரப்பினரையும் சமகாலத்தில் விடுவிப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விரைவுபடுத்துவது தற்போது எழுந்துள்ள சூழ்நிலையை சுமுகமாக்கிக்கொள்ள உதவுமென நம்புகின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கைதடியில்...

குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இவ்வழக்கில், மேற்படி சம்பவம் நடைபெற்ற போது கடமையிலிருந்த இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, மேஜர் வீரக்கொடி, கப்டன் டுமிந்த கெப்பிற்றிபொல, லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ, சுனில் மற்றும் மேற்படி சம்பவம் நடைபெற்ற காலப்பகுதிகளிலிருந்து 2002 ஆம் ஆண்டுவரை யாழ். மாவட்டத்தில் கடமை புரிந்த இரு அரசாங்க அதிபர்களும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்படவுள்ளனர்.

இவ்வழக்கினைத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கக் கூட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்டன.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என மேற்படி சங்கத்தின் செயலாளர் சற்குணம் தெரிவித்தார்.

(லி)

## பாவனைக்கு...

அப்பிள் மற்றும் பழவகைகள் யாழ்.நகரில் அதிகமாக விற்பனையாகின்றன.

இவற்றில், மனித பாவனைக்கு உதவாத பழுதடைந்த அப்பிள் பழங்களும் விற்பனைசெய்யப்படுகின்றன. இந்த அப்பிள் பழங்கள் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக பொதுமக்கள் சிலர் தம்மிடம் முறையிட்டுள்ளதாக மாநகர சுகாதாரப்பிரிவின் பிரதம சுகாதார பரிசோதகர் ஆர். ஜீவானந்தன் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் செய்த முறைப்பாடுகளை அடுத்து, கடந்தவாரம் யாழ். நகர் பகுதியில் பெருமளவிலான அப்பிள்பழங்கள் சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டது எனவும்,

பொது மக்கள் அப்பிள்பழங்களை கொள்வனவு செய்யும் போது சிறு சேதங்கள், நசிவுகள், வாடிய நிலையல் உள்ள பழங்களை கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

(ச)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
## இன்றைய ஆட்டங்கள்

ICC Cricket World Cup South Africa 2003

அவுஸ்திரேலியா Vs இங்கிலாந்து - ST. GEORGE'S PARK, PORT ELiZABETH 2 pm.



பாகிஸ்தானுடனான போட்டியில் 98 ஓட்டங்கள் குவித்த சச்சின் டெண்டுல்கரின் அதிரடி

# சாவகச்சேரி நகரப் பகுதிக்கு அடுத்த வாரம் மின் விநியோகம்

சாவகச்சேரி நகர்ப்பகுதிகளுக்கு, எதிர்வரும் 5 அல்லது 6 ஆம் திகதி முதல் பகல் நேர மின்சாரம் வழங்கப்படவிருக்கின்றது.

இந்த மின்சார விநியோகத்திற்கான மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் இருபத்தி நான்கு மணி நேர மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு, இன்று முதல் 24 மணி நேர மின்விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டவுடன் இங்கு பாவனையிலிருந்த ஜெனரேற்றர்கள் மூலம் சாவகச்சேரி நகர், காரைநகர் கிழக்குப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. (ச)

## அமைதிக்கு...

ஏற்படுத்துவதற்கு இரு பிரதமர்களும் இணக்கம் கண்டுள்ளனர். இந்தப் பொருளாதார உடன்படிக்கைக்கான பூர்வாங்க ஒழுங்குகள், எதிர்வரும் ஜுன் மாதத்துக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தலை மன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையில் பாலம் ஒன்று அமைப்பது குறித்தும் இரு பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடாத்தினர். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிறுவப்படவிருக்கும் இந்தப் பாலத்தினால் இரு நாடுகளும் தனியொரு பொருளாதார வலயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றும் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், இந்திய எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரதமர், இந்திய எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தியைச் சந்தித்தபோது, அவர் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு விடுத்த அழைப்பை சோனியா ஏற்றுக்கொண்டார்.

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவும் இருவரும் கருத்துப் பரிமாறிக்கொண்டனர்.

இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு, இலங்கைப் பிரதமர் எடுத்துவரும் முயற்சிகளுக்காக சோனியா காந்தி அவரைப் பாராட்டினார்.

மனிதநேயப் பிரச்சினைகளுக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் காணப்படும் குறைபாடுகளுக்கும் தாமதமின்றி தீர்வு காணவேண்டும் என்றும் சோனியா கேட்டுக்கொண்டார்.

**விற்பனைக்கு!**

இரு மாடிக் கட்டடங்களைக் கொண்ட இரு கடைகள் ஸ்ரான்லி வீதியில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - செ.வயிரமுத்து
138/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்

(சி/646)

**கண்டியிலிருந்து யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!**

வீட்டில் இருந்தே ஆங்கிலம் கற்று, Diploma சான்றிதழ் ஒன்றைப் பெற நீங்கள் தயாரா?

தபால் மூலம் ஆங்கிலப் பாடநெறி - SPOKEN ENGLISH BY POST

2003 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்

இலவசம் - FREE

பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன இலவசமாக வழங்கப்படும்

* English - Tamil - Dictionary - ஆங்கில தமிழ் அகராதி
* Spoken Sinhala Course - சிங்களப் பேச்சுப் பயிற்சி பாடநெறி
* அழகிய Bag ஒன்று

மேலதிக விபரங்களைத் தபால் மூலம் பெற நீள கடிதவுறையை அனுப்பவும்.

மேலதிக விபரங்களை Tele Phone மூலம் பெற அழையுங்கள் 08-201433

(சி-647)

JEFFWOOLAR EDUCATIONAL INSTITUTE P.O. BOX 119 - KANDY Tele: 08-201433, 0777-213181

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.03.2003 அன்று பொன்னுத்துரை ஶ்ரீதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.